வாரப் பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

தாமரைப்பூ
மார்க்
கண்களுக்கு பிரகாசமும் மூளைக்குக் குளிர்ச்சியையும் தருவது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.
சந்தனத்தைலம்
முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்ஸ்:-
M. ஹைதரலி & பிரதர்ஸ்.
22. 2/7 ஆதமலி பில்டிங், கொழும்பு 11

புத்தகம் 6 | நந்தன ஸு ஆவணி மீ 30உ | [14-9-52] | ஞாயிற்றுக்கிழமை | துல்ஹஜ் பிறை 24 | இதழ் 15

# ★ சேர் ஜோன் கவர்னர்-ஜெனரல் ஆகலாம்!

## பிளவை மூடிமறைக்க பதவிப் பரிசா?

## யு. என். பிக்குள் வேறு பேதங்களும் குட்டிக் கட்சிகளும்

[நமது அரசியல் நிருபர்]

இலங்கை மந்திரி சபையில் இன்னொரு நெருக்கடி ஏற்பட்டு அட்சி சின்னாபின்னப்பட்டுப் போகாவிடில், அல்லது வேறுவிதமான முடிவு செய்வதற்காக மாற்றுத் திட்டங்கள் எதுவும் வகுக்கப்படாவிடில் அதி சீக்கிரம் சேர் ஜோன் கொத்தலாவல இலங்கையின் கவர்னர்—ஜெனரல் ஆக்கப்படுவார் என அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

தேதி கூட குறிக்கப்பட்டாயிற்று என்று அடிபடும் வதந்தியில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று சொல்லமுடியாது.

"தோட்டப் பாதையிலே அல்லது 1952 ல் பிரதமர் பதவிப் போட்டி" என்று சர் ஜோனின் சொந்த நாட்குறிப்புப்போல யாராலோ வெளியிடப்பட்ட ஓர் பிரசுரத்தின் காரணமாக கடந்த புதன்கிழமைவரை மந்திரி சபையில் நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்பட



சேர் ஜோன்கொத்தலாவல

டிருந்தது. அந்தப் பிரசுரத்திற்கும் தமக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்று சேர் ஜோன் கூறிவிட்டதனால் நெருக்கடி சீர்ப்படுத்தப்பட்டது.

பிரஸ்தாப நெருக்கடி உச்ச நிலையில் இருந்த போது தற்போதைய கவர்னர்—ஜெனரல் சோல்பரி பிரபு ராஜ்யம் கவலைப்பட்டதாகவும் தமது பதவியை ராஜினாமாச் செய்தேனும் மந்திரி சபையில் ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்ட அவர் துணிந்திருந்தார் என்றும் தெரியவருகிறது.

### சேர் ஜோன் மந்திரி சபை

சேர் ஜோன் கொத்தலாவல மந்திரி சபையை விட்டு வெளியேறினால் ஆட்சிக் கட்சியின் சார்பில் இருக்கும் சுமார் 21 அங்கத்தவர்கள் சேர் ஜோனுடன் சேர்ந்துவிடுவார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டதாம். அந்த நிலைமை ஏற்பட்டு எதிர்க் கட்சியின் ஆதரவும் கிடைத்தால் சேர் ஜோன் மாற்று மந்திரி சபை அமைக்கும் நிலைமைகூட உருவாகியிருக்கலாம்.

### சோல்பரி கலக்கம்

அப்படி ஒரு நிலைமை ஏற்படுவது சோல்பரி பிரபுவுக்கு அறவே பிடிக்கவில்லையாம். சாம்ராஜ்யத் தொடர்பு என்னும் விலங்கை இலங்கை அறவே அறுத்தெறிந்து பரிபூரண சுதந்திர நாடாகவேண்டும் என்று அடிக்கடி கூறி வருபவர் திரு எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயகா. பற்றும்படி எதிர்க்கட்சியில் அபேதவாத ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. எனவே இந்த நாடு அப்படியானவர்களின் ஆட்சியில் சிக்கினால் பிரிட்டனுக்கு இலங்கை மீது ஆதிக்கம் அற்றுவிடுமல்லவா! யு. என். பியின் கட்டுக்கோப்பு குலையாமல் அதன் ஆட்சியின் கீழ் இலங்கை இருக்குமானால் அது என்றென்றும் பிரிட்டனின் தாசானுதாசனாகவே இருந்துவரும். ஆட்படியெல்லாம் கருதியே மந்திரி சபையுள் சமாதானத்தை உண்டாக்குவதற்காக தமது பதவியைக் கூடப் பரித்தியாகம் செய்ய சோல்பரி பிரபு தயாராய் இருந்தாராம்.

சேர் ஜோன் இலங்கைக்குத் திரும்புமுன்பே இன்றைய நிலைமைகளும் விவரங்களும் சேர் ஜோனின் தாயாரான ஸ்ரீமதி அலிஸ் கொத்தலாவலைக்கு நன்கு விளக்கப்பட்டனவாம். இந்த நாடகத்தில் சேர் ஜோன்

வர் குணதிலகா தமது பாகத்தை அரங்கத்திற்குவராமல் திரையின் பின் ஆடித் தீர்த்தார் என்றும், செனட்டர் பேராசிரியர் ஆட்டியகலை, சேர் மகாதேவா, வர்த்தக மந்திரி ஆர். ஜி. சேனநாயகா ஆகியோரே அம்பலத்தில் ஆடினார்கள் என்றும் தெரியவருகிறது.

### ஏமாற்றம்

'தோட்டப் பாதையிலே" என்ற பிரசுரத்தை யார் வெளியிட்டிருந்த போதிலும் தாமே அதன் ஆசிரியர் என்று சேர் ஜோன் துணிந்து கூறுவார் என யு. என். பி வாலிப இயக்கத்தினர் கருதியிருந்ததாகவும், அவரை ஒரு வெற்றி வீரனாகக் கொண்டாட அவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் சேர் ஜோனின் அறிக்கை அவர்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

[5-ம் பக்கம் பார்க்க]

## கள்ளத் தோணிக் காரரென்று சத்தியாக்கிரகி கைது

### தொண்டர்கள் மீது போலீஸ் பார்வை

திரு வி. கே நாராயணசாமி ஒரு பிரபல சத்தியாக்கிரகி

இம்மாதம் 8ந் தேதி 'கள்ளத்தோணி பேர்வழி' என்று அவரைப் போலீஸார் கைது செய்துவிட்டனர். அவர் சத்தியாக்கிரகிகளின் நலன்களைக் கவனிப்பவர் என்பதை அத்தாட்சி ரூபமாக நிரூபித்துக் காட்டினார் ஆனால் அதெல்லாம் போலீஸார் ஏற்றுக்கொள்ளவில்லை. அரிசிக் கூப்பன் முதலிய தஸ்தாவேஜுகளை கொண்டுவந்து காட்டியதால்தான் கடைசியில் தலைதப்பியது இல்லையேல் அவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருப்பார், கோர்ட்டில் அவர் விடுதலை செய்யப்பட்டாலும் 'விரும்பத்தகாதவர்' என்ற பெயரால் அவர் தனுஷ்கோடியில் கொண்டுபோய் விடப்படுவார். அப்புறம் அதற்கு அப்பீல் கிடையாது.

இச்சம்பவத்திலிருந்து சத்தியாக்கிரகிகள் மீது போலீஸாரின் பார்வை விழுந்திருக்கிறது என்று தெரிகிறது. சத்தியாக்கிரகிகள் எந்தசமயத்திலும் "கள்ளத்தோணி தமிழர்கள்' என்று போலீஸ் ஸ்டேசனுக்கு இழுத்துச் செல்லப்படலாம். சத்தியாக்கிரகிகளுக்குப் "பாடம்" கற்பிக்க இது ஒரு புதிய முறையாகவும் இருக்கலாம். ஆகவே "பிரஜாவுரிமை' வேண்டும், வாக்குரிமை வேண்டும்"




திரு வி. கே. நாராயணசாமி

என்ற கோஷங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளுடன் சேர்த்து தத்தம் அரிசிக் கூப்பனையும் வைத்திருக்க வேண்டிய நிலைமை சத்தியாக்கிரகிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

### பாரத நாமம் வாழ்க

வர கவி சுப்பிரமணியபாரதியின் சிரார்த்த தினம் இம் மாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை தமிழ் மக்கள் வாழும் இடமெல்லாம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## இலங்கையிலுள்ள என் அபிமானிகளுக்கு:



முருகன் டாக்கீஸில்
என்னைச் சந்தியுங்கள்
இங்ஙனம்
மாதுரிதேவி
★
"என் தங்கை"
யின் 105-வது நாள் காட்சியின் போது
நடிகை
மாதுரிதேவி நேரில்விஜயம் செய்கிறார்
காணத்தவறாதீர்கள்
சனி, ஞாயிறு - காட்சிகள
1-30, 5-30, 9-30
டிக்கட் -- 3-60, 2-25 1-10
ஸ்ரீமதி கஸ்தூரியும்
கோஷ்டியாரும்
இசைவிருந்தளிப்பார்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கக் கேள்விப் பத்திரங்கள்

கிருஷிக இலாகா.

N. 2679. திருநெல்வேலி அரசினர் பரிசோதனைத் தோட்டத்திற்கும், உடுவில், வெம்பிராய், பாவிட்டபுரம் ஆகிய இடங்கள் இல்ள அரசினர் சிகரெற் புகையிலை வீதானங்கட்கும் தேவையான 40 தோன் நன்றாகக் காய்ந்த மாட்டெருவிற்கு கேள்விப் பத்திரங்கள் (யாழ்ப்பாணம் வட பகுதிக் கிருஷிக உத்தியோகத்தரால் 18-9-52 வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். வேண்டிய முழு விபரங்களையும் யாழ்ப்பாணக் கிருஷிகக் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

## அரசாங்கக் கேள்விப் பத்திரங்கள்

கிருஷிக இலாகா.

N. 2680. வட மாகாணத்திலுள்ள கிருஷிகத் தோட்டங்களுக்கு 1952-53-ம் நிதி வருடத்திற்குத் தேவையான 40000 இணைக் கிடுகுகளுக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் வடபகுதி கிருஷிக உத்தியோகத்தரால் 25-9-52 நடுப்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். தேவையான மற்றெல்லா விபரங்களை யாழ்ப்பாணம் கிருஷிக கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## வரி விளம்பரம்

வரியொன்றுக்கு 50 சதம். 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00.

### தேவை

விலஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர் 196, தட்டாதெரு
கொழும்பு.

டபிள் டிமை சைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செஸ் உடனடியாக தேவை. விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன்
194, ஏ தட்டாதெரு
கொழும்பு-12.

## வட மாகாண ஆசிரியர் சங்கம்

வட மாகாண அரசினர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் ஆறுவது வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியில் 30-8-52ல் திரு எஸ் எம் ஜோசெப் தலைமையில் நடந்தது.

சப்பள சம்பந்தமாக உள்ள நிதிச் சட்டம் 110 (F. R. 110) அரசினர் பாடசாலை ஆசிரியர்கட்கும், ஏனைய அரசாங்க ஊழியர்கட்கும் போல பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

## தீனபந்து கலா மன்றம்

கண்டி மாகிபாவிலிருக்கும் இரட்சணிய சேனா பள்ளிக்கூடத்தில் கடந்த 1-9-52ல் "தீனபந்து கலா மன்றம்" என்ற பெயரில் ஒரு வாசிகசாலை நிறுவப்பட்டது. வாசிகசாலையை மேற்படி பள்ளிக்கூட தலைமையாசிரியர் திரு வி. கே. தேவதாஸன் திறந்துவைத்தார்.

எம். பூபாலசிங்கம்,
நீர்கொழும்பு.
கே: ஒளியைவிட வேகமானது எது?
ப: தெரியாது.

ஃ

ரீ. சித்தி விநாயகன்,
சாவகச்சேரி.
கே: டாராளுபலன் றத்தேர்தல் என்றால் என்ன?
ப: முதலாளிகளின் பணத்திலே பாடுபடாதவன் சொகுசாக வாழ நடத்தும் கோமாளிக்கூத்து.

ஃ

அருள் தங்கையா, சேகாலை.
கே: நீர் குயுக்தி, நான் குள்தி இருவரும் எந்தக் கோதாவில் சந்திப்போம்?
ப: "கேட்டுப்பாருங்கள்" என்ற இந்தக் கோதாவில் சந்திப்போம்.

ஃ

ந. சுந்தரப்பிள்ளை,
அராலி தெற்கு.
கே: நீர் சில கேள்விகளுக்கு விடையளிப்பதைப் பார்த்தால் காதலில் ஏமாற்றமடைந்தவர் போல் காணப்படுகிறீர் சரிதானா?
ப: இடா ஜொனியரே நீர் கூறுவது மெத்தச்சரி. காதல் என்னிடம் பல தடவை களில் ஏமாற்றமடைந்திருக்கிறது.

ஃ

பி. சர்தாரமூர்த்தி, கண்டி.
கே: வெளியில் புறப்படும்போது ஆடம்பரமாக அலங்கரித்துக்கொண்டு வளவளவென வாது பேசும் ஒரு நாற்பது வயதுப் பெண்மணி, வீட்டில் இருக்கும்போது நான் போனால் ஓடி ஒளிகிறாளே அது ஏன்?
ப: பொய்ப் பல்லைக் கழற்றி வைத்திருக்கும் பொக்கைவாயை நீர் கண்டு கொள்வீர் என்ற பயமாயிருக்கலாம்.

ஃ

பத்மநாதன்,
அளவெட்டி.
கே: இந்த உலகத்தின் இரகசியத்தை ஒரு இளம் பெண்ணிடம் வெளியிட்டால் என்ன சம்பவிக்கும்?
ப: பத்து மாதத்திற்கு மேல் அந்த இரகசியத்தை அவளால் காப்பாற்ற முடியாமல் இருக்கும்.
கே: எந்த இரகசியத்தையுமே பெண்ணிடம் வெளியிட்டால் அதை அவளால் ஒரு கணப்பொழுதுகூட பாதுகாக்க முடியாது என்று என் நண்பர் கூறுகிறார் அது சரியா?
ப: இல்லை அவளுடைய வயதைப் பற்றிய இரகசியத்தை அவளிடம் கேட்டுப் பாருங்கள். அதை அவள் ஊழிகாலம் வேண்டுமானாலும் வெளியிடாமல் பாதுகாப்பாள்.

ஃ

ப. காஞ்சனா, ஓட்டுமடம்.
கே: தன் அழகைப் பற்றிச் சதா பெருமைப்படும் ஒரு பெண்ணுக்கு நண்பர் யார்? விரோதி யார்?
ப: இரண்டும் நிலைக் கண்ணாடிதான்.

ஃ

கோ. சிங்காரம், கொழும்பு.
கே: உம்முடைய மனைவியோடு ஒரு மணித்தியாலத்தைக் கழிக்க விரும்புவீரா அன்றி ஒரு தமிழ் சினிமாக் கொட்டகையில் மூன்று மணித்தியாலங்களைக் கழிக்க விரும்புவீரா?
ப: சினிமாக் கொட்டகையைத் தான் விரும்புவேன். ஏனெனில் அங்கு அடிக்கடி பாட்டுக்களையும் கேட்கலாம். இங்கே ஓரே பேச்சுமயந்தானே!

ஃ

# கேட்டுப்பாருங்கள்

எம். எச். எம் ஜெஉபர்
கே: ஐயா, குயுக்தியாரே, கேட்கப்படும் கேள்விகள் எல்லாவற்றிக்கும் பதில் கூறுகிறீரே நீரும் யு என். பியோடு சேர்ந்து அதில் ஒரு மந்திரிப் பதவியை வகித்தால் எதிர்க் கட்சியார் கேட்கும் ஒவ்வொரு கேள்விகளுக்கும் பதில் சொல்லலாமே!
ப: ஐயோ, வேண்டாம் அவர்களைப்போல மழுப்பல் பதில்கள் கூற எனக்கு வராதப்பா.

ஃ

ம. சபாரத்தினம்,
சுன்னாகம்
கே: இன்று தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்படும் சைவத் தமிழர்கள் கிறிஸ்தவ அல்லது பௌத்த மதத்தில் சேர்ந்தால் அவர்கள் நிலை எப்படியிருக்கும்?
ப: அப்படியேதானிருக்கும். பௌத்த மதத்தில் ஒதுக்கப்பட்ட றொடியர் வாழ்வதும் கிறிஸ்தவ தேவாலயங்களில் அந்தஸ்துக்குதக்க ஆசனம் ஒதுக்கப்பட்டிருப்பதும் காணலாம். தாழ்த்தப்பட்டோர் நிலை சம்பிரதாய சமய மாற்றத்தால் ஒழியாது விடாது. அந்த சமூகம் விழித்தெழுந்து கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறுமானால் நிலையில் பரிபூரண மாற்றம் ஏற்படும்.

ஃ

வே. தப்பிரசா,
சுன்னாகம்
கே: கடவுளுக்கு வெளிச்சம் போடுவதற்காக கற்பூரம் என்ற எரி பொருளுக்கு எத்தனை ஆயிரம் ரூபாய் இந்த நாட்டிலிருந்து ஜப்பானுக்குப் போகிறது?
ப: பகுத்தறிவு வாலிபர்கள் டாக்டர் விபூதியென்னும் முகப் பவுடருக்கும் சாந்தனம் என்னும் கிறீமுக்கும் மேல் நாடுகளுக்குக் கொட்டித் தொலைக்கும் பணத்தில் பாதிகூட இருக்காது.

ஃ

என். ஏ. அப்துல் காதர்,
திருக்கோணமலை
கே: அரிசிவிலை அதிகரித்தால் ஏழைகளின் கஷ்டம் அதிகரிக்கத்தானே செய்யும்?
ப: அதனால் என்ன, நமது மதிப்புக்குரிய மந்திரி ளும் பட்டிருப்புப் பிரதிநிதி ராஜமாணிக்கமும் ஏழைகள் என்ற பட்டியலில் சேர்ந்தவர்களல்லவே.

ஃ

ப. சுந்தர மகேசன்,
மட்டக்களப்பு
கே: பெண்களைப்பற்றி ஆண்கள் என்ன நினைக்கிறார்கள்?
ப: வெறும் விளையாட்டுப் பொம்மைகள் என்று.

ஃ

ஆனந்தன்,
யாழ்ப்பாணம்
கே: ஒரு விஷயத்தைப் பரப்புவதற்கு சிறந்த சாதனம் எது?
ப: மிகச் சிறந்த சாதனம் பெண்கள் தான். ஒரு பெண்ணுடைய காதில் விஷயத்தைப்போட்டு "இது இரகசியம்; யாரிடமும் சொல்லிவிடாதே" என்று சொல்லிவிட்டால் சரி.

ஃ

★ செல்வி கே. பாரிஜாதம்
கம்பளை
கே: தகுதியும் உரிமையுமுள்ள பல மந்திரிகளை வஞ்சித்து தன் மகன் டட்லியைப் பிரதமராக்குப்படி சோல்பரியிடம் சொல்லி வைத்துவிட்டு சரியான தருணத்தில் உயிரைவிட்ட "தேசத் தந்தை" சேனநாயகாவின் செயல் நியாயமானதா?
ப: அம்மா பாரிஜாதம், நீங்கள் திருக்குறள் படித்ததில்லையா? படித்திருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்கமாட்டீர்கள். தந்தை தன் மகனுக்கு செய்ய வேண்டியதைத்தான் சேனநாயகா செய்திருக்கிறார். வள்ளுவர் என்ன சொல்லுகிறார்? "தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்"; அதாவது மகனை ராஜசபையில் முதன் மந்திரியாக்கிவிடுதல்!

> ## பரிசு ரூ. 3-00
>
> யாரும் கேள்விகள் அனுப்பலாம். ஆனால் கேள்விகள் போஸ்காட்டில் மட்டுமே எழுதப்படவேண்டும். தகுந்த கேள்விகளுக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் கருத்துப் பொருத்தமான பதில் கிடைக்கக்கூடிய சிறந்த கேள்வியை அனுப்புபவர்களுக்கு ரூ 3-00 பரிசு வழங்கப்படும்.

ஃ

பி. எம். ராமையா,
வட்டக்கொடை
கே: இலங்கையில வசிக்கும் இந்தியர்களை இலங்கை அரசாங்கம் என்ன செய்ய நினைக்கிறார்கள்?
ப: அவர்கள் காலில் இலங்கைத் தமிழர்களையும் கட்டி எல்லோரையும் வங்காள விரிகுடாக் கடலில் தள்ளிவிட ஆறு வருடத் திட்டம் போட்டால் என்ன என்று நினைக்கிறார்கள்.

ஃ

ஜி. தேவதாசன்,
பொலகாவெல
கே: மனிதனால் வெல்ல முடியாதது எது?
ப: ஆசை. முற்றுந்துறந்த முனிவர்கூட கடவுளிடம் கலந்துவிட ஆசைப்படுகிறார் அல்லவா?

ஃ

பி. எம். காசிலிங்கம்,
பதுளை
கே: திருட்டுப்போன பொருளைத் திரும்பப் பெறுவது எப்படி?
ப: ஸ்ரீமத் திருபுக்கியார் ஒரு செல்வராய் இருந்த காலத்தில் ஒரு நாள் என் இருதயத்தைத் திருடிக் கொண்டுபோய் விட்டாள். நான் அவளைத் துரத்திப் பிடித்து விவாகம் செய்து கொண்டேன்.

ஃ

சி. சுப்பையா,
யாழ்ப்பாணம்
கே: நான் வைஜயந்திமாலாவை மணக்க விரும்புகிறேன் சாத்தியப்படுமா?
ப: வைஜயந்தி யென்பது வாசமடக்கச் செடியைக் குறிக்கும்; மாலா என்பது மாலை. எத்தனை மாலை வேண்டுமானாலும் கட்டி மணந்துகொள்ளலும் யாருக்கும் தடையில்லை?

ஃ

கே. ராமசாமி,
உந்துகொட
கே: புத்த பிக்ஷுவாகப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு, பிரதமர் பதவி வந்ததும் அதை அப்படிக் கொண்ட டட்லியை எதற்கு ஒப்பிடலாம்?
ப: ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கிற்கு ஒப்பிடலாம்.

★ இவ்வாரம் ரூ 3-00 பரிசு பெற்றவர்.

ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாசம்
பீடியிற் சிறந்தது கமலா பீடி
★
கமலா, லீலா பீடிகளுக்கும் பீடிகளுக்குத் தேவையான நாகப்பூர், சிங்கநணி இலைகளும், ஆக்கூழ் நிறபாணி புகையிலைகளும சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்
வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.
கமலா ஸ்டோர்ஸ்
Proprietor, S. V. பொன்னம்பலம்
19, செட்டியார் தெரு, கொழும்பு
போன்: 3597. தந்தி: தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து நாட்டில் நடப்பதென்ன?

## நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்கப் புரட்சி

## ஜெனரல் நாகிப்பின் மின்வெட்டு நடவடிக்கைகள்

இருண்ட கண்டம் எரிமலையெனக் குமுறுகிறது தெற்கே மக்கள் புரட்சி—வடக்கே ராணுவப் புரட்சி. எகிப்தில் ரத்தம் சிந்தாத ராணுவப் புரட்சி—ஜூலை 26ந் தேதி மன்னர் பரூக்கின் மணிமகுடத்தைப் பிடுங்கிக் கொண்டு அவரை நாட்டைவிட்டோட்டிய அந்தப் புரட்சி செப்டம்பர் 7ந் தேதி அலி மெஹர் பாஷாவின் ஆட்சியைக் கவிழ்த்து நாட்டை ராணுவ ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்திருக்கிறது

மேற்கண்ட இரு சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டு எகிப்திலே இரு புரட்சிகள் நடைபெற்றுவிட்டன என்று சில பத்திரிகைகள் எழுதுவது முற்றிலும் தவறு: அந்த ஒரே புரட்சிதான் நடைபெறுகிறது. அப்புரட்சியின் இரு கட்டங்கள் பூர்த்தியாகிவிட்டன இன்னும் இரு கட்டங்கள் இருக்கின்றன எனவே அப்புரட்சி இன்னும் இயங்கிக் கொண்டுதானிருக்கிறது அது ஜனநாயகத்திற்கு விரோதமான புரட்சி என்று பறை சாற்றுவதும் பித்தலாட்டமாகும் அது முழுக்க முழுக்க ஜனநாயகப் புரட்சியாகும். எகிப்தில் நடைபெறும் மின்வெட்டு சம்பவங்களை சோஷலிஸக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தால் நிலைமையைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

### விவசாயிகள் புரட்சி

எகிப்து நிலப்பிரபுத்துவ ஆதிக்கமுள்ள நாடு. தொழில் வளர்ச்சியற்ற விவசாய நாடு நிலச்சுவான்கள் லட்சோப லட்சம் விவசாயிகளைக் கசக்கிப் பிழிகின்றனர் நிலப்பிரபுத்துவ முறையின் காலடியில் சிக்கி நசுங்கிய விவசாயப் பெருமக்கள் அடிமைகளைப் போல வாழ்கின்றனர் ஆகவே அவர்கள் நிலப்பிரபுத்துவத்தைச் சுட்டுப்பொசுக்கி, அதன் பிடியினின்று விடுதலையடைய முயற்சிப்பது இயற்கையே. அவர்களுடைய புரட்சிதான் இன்று நடைபெறுகிறது ஆகவே அது ஜனநாயகப் புரட்சி என்பதில் சந்தேகமில்லை. அது வெறும் ராணுவப் புரட்சி அல்லவென்றும் நாட்டு மக்கள் அதன் பின்னால் அணிவகுத்து நிற்கிறார்களென்றும் 3-8-52ல் "சுதந்திரனில்" எழுதினோம் ராணுவத்தின் பேராதரவுடன் விவசாய மக்களின் விடுதலைப் போராட்டம்தான் இன்று ஜெனரல் நாகிப் தலைமையில் அங்கு நடைபெறுவது. நாகிப் ஒரு விவசாயியா? ராணுவம் ஏன் விவசாயிகளுக்கு உதவி செய்கிறது? என்ற கேள்விகள் கேட்கப்படலாம். எகிப்தில் ராணுவ சிப்பாய்களில் 100க்கு 90 பேர் நிலமில்லாத விவசாயிகள். சாகுபடி செய்வதற்கு நிலம் கிடைக்காததால் ஜீவனோபாயத்திற்காக அவர்கள் ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு நிலமளிக்கும் இயக்கத்தில் அவர்கள் முன்னணி தாங்குவது ஆச்சரியமன்று இதனால் அவர்களுக்கும் நிலம் கிடைக்குமென்பது நிச்சயம். ஜெனரல் நாகிப் உழைப்பாளரல்ல. அவர் முதலாளித்துவ வகுப்பைச் சேர்ந்தவர். ஆனால் அவர் நிலப்பிரபுக்களுடன் சேராமல் விவசாயப் புரட்சிக்குத் தலைமை தாங்குகிறார். காரணமென்ன?

### ஒலிவர் கிராம்வெல்

நிலப்பிரபுத்துவ முறை ஆதிக்கம் வகிப்பதால் எகிப்தில் முதலாளித்வமுறை வளர்ச்சியடையமுடியவில்லை ஆகவே எகிப்து பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடாகிவிட்டது. ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஏகபோக முதலாளிகளும் அவர்களுடைய ஸ்தாபனங்களும், பத்திரிகைகளும் நிலப்பிரபுக்களுடன் சேர்ந்து கொண்டனர். (இன்று நூற்றுக் கணக்கில் கைது செய்யப்பட்டிருப்பவர்களில் அவர்களும் சிலர் இருக்கின்றனர்) ஆனால் சிறிய முதலாளிகளும் வளர்ந்து வரும் இளம் முதலாளிகளும் நாகிபுடன் சேர்ந்து கொண்டார்கள். ஜெனரல் நாகிப்புதான் அவர்களின் பிரதிநிதி. நாகிப் புரட்சிக்குத் தலைமை தாங்குகிறாரென்றால், வளர்ந்துவரும் முதலாளிகள் தலைமை தாங்குகிறார்களென்பதுதான் அர்த்தம். ஆகவே இந்தப் புரட்சிக்குப் பொருத்தமான பெயர் "முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி" என்பதுதான். இந்த ஜனநாயகப் புரட்சிதான் 17ம் நூற்றாண்டில் ஒலிவர்கிராம்வெல் தலைமையில் பிரிட்டனில் நடைபெற்று, பிரபுத்துவ அரசன் சார்லஸ் மன்னனை ஒழித்துக்கட்டி முதலாளித்வத்தை ஆட்சிபீடத்தில் அமர்த்தியது எகிப்தின் ஒலிவர் கிராம்வெல்தான் ஜெனரல் நாகிப் அரசாங்க ஆதிக்கம் முதலாளிகள் விவசாயப் புரட்சிக்குத் தலைமை தாங்குவதால் முதலாளித்துவத்திற்கு என்ன பயன் ஏற்படப் போகிறதென்று கேட்கலாம். எகிப்தில் நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் முதலாளித்துவ வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது. ஆகவே அதனை ஒழித்துக்கட்டி ஆதிக்கத்தைக் கைப்பற்ற அவர்கள் முன்வந்திருப்பது ஆச்சரியமன்று. அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றாவிட்டால் தாங்கள் முன்னேற முடியாதென்பது முதலாளிகளுக்குத் தெரியும். பரூக் மன்னர் நிலப்பிரபுக்களின் பிரதிநிதி. ஏன், அவரே லட்சம் ஏக்கர்களுக்கு சொந்தக்காரராக இருந்தவர். ஆகவே முதலில் அவர் ஒழிக்கப்பட்டார்; மன்னர் போனதால் நிலப்பிரபுத்துவம் வீழ்ச்சியடையவில்லை பிரபுத்துவ பிடியினின்று விவசாயிகளை விடுதலை செய்வதற்காக புரட்சிகாரர்கள் நிலச்சீர்திருத்த திட்டத்தைக் கொண்டு வந்தனர்.

### புரட்சி பூர்த்தியானால்.......

இந்தப் புரட்சி நிறைவேறும் பட்சத்தில் எகிப்தில் ஏற்படும் மாறுதல்கள் யாவை புரட்சியை முற்போக்கு உலகம் ஆதரிக்க முடியுமா என்பனவற்றைச் சிறிது ஆராய்வோம்: புரட்சி பூர்த்தியானால் (1) நிலப்பிரபுத்துவமுறை பிடி சாம்பலாகிவிடும் (2) விவசாயிகள் பண்ணை முறையினின்று விடுதலையடைவதுடன் நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கும். (3) முதலாளித்வம் அரசாங்கத்தைக் கைப்பற்றும் (மீதமாகும் நிலப்பிரபுத்துவத்தின் துண்டு துணுக்கள் இறுதியில் முதலாளிகளுடன் சேர்ந்துவிடுமென்பது குறிப்பிடத்தக்கது) (4) தொழில் வளர்ச்சி துரிதமாக ஏற்படும். (5) வர்த்தகம் வளரும். 6) விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யப்படும். (7) நாடு முன்னேறும். இப்புரட்சியின் விளைவாக முதலாளித்துவம் ஆதிக்கத்திற்கு வந்து, மேற்கண்ட முன்னேற்றங்களை ஏற்படுத்துவதால முற்போக்கு உலகம் இப்புரட்சியை ஆதரிக்கிறது. முதலாளித்வம் பிற்போக்கானதாயிற்றே, அதை எப்படி ஆதரிப்பது என்று சிலர் கேட்கலாம். முதலாளித்துவம் பிற்போக்கானதுதான் ஆனால் அதைவிட நிலப்பிரபுத்துவம் பிற்போக்கானது முதலாளித்வம் நிலப்பிரபுத்துவத்தைக் காட்டிலும் ஆயிரமடங்கு முற்போக்கானது என்பதில் இம்மியளவுகூட சந்தேகமில்லை. நிலப்பிரபுத்துவம் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைபோட்டது ஆனால்முதலாளித்வம் நாட்டைத் தொழில்மயமாக்கிவிடும். உலகில் முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சியைப் பார்த்தால் இது புலனாகும். ஆகவே நிலப்பிரபுத்துவம் ஒதுக்கப்பட்டு முதலாளித்துவம் ஆதிக்கத்திற்கு வருவதை இந்த இடத்தில் நாம் ஆதரித்தாக வேண்டும்.

### நாகிப்பின் எச்சரிக்கை

இந்தப் புரட்சியில் ஒரு பிற்போக்கான அம்சமும் இருக்கிறது. அதுதான் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் போன்ற இடதுசாரிகளை இப்புரட்சி ... இடதுசாரிகள் இயக்கம் சோஷலிஸ சமுதாயத்தை நிறுவுவதாகும். நிலப்பிரபுத்துவம் எப்படி முதலாளித்துவத்தின் விரோதியோ, அதேமாதிரி முதலாளித்துவம் சோஷலிஸத்தின் விரோதியாகும் ஆகவே நாகிப்பின் ஜனநாயகப் புரட்சி சோஷலிஸத்திற்கு எதிராகச் செல்கிறது மற்றும் நாகிப் இடதுசாரிகளை எச்சரித்திருக்கிறார். இடதுசாரிகளின் எண்ணப்போக்கின்படி, நாகிப் வீழ்ச்சியடைந்துவிட்ட பிரபுத்துவத்துடன் சேர்ந்து முதலாளித்துவமும் ஒழிக்கப்பட்டு சோஷலிஸ சமுதாயம் நிறுவப்படல் வேண்டும். ஆகவே இறைபட்சத்தில் மேற்கூறிய மூன்று சமுதாய சக்திகளும் இயங்குகின்றன ஆனால் சோஷலிஸ சக்தி மிகப் பலவீனமாயிருக்கிறது.

### மீண்டும் நிலப்பிரபுத்துவ மேற்படுமா?

இப்பொழுது புரட்சிக்காரர்களின் கையில் அரசாங்கம் வந்துவிட்டதால், புரட்சியின் மூன்றாவது கட்டம் அரசாங்க அதிகாரத்தைக் கொண்டு நிலச்சீர்திருத்தத்தை உடனடியாக அமுல் நடத்துவதுதான். அவ்வாறு செய்யும்போது நிலப்பிரபுக்கள் கையைக் கட்டிக்கொண்டு சும்மா பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்களென்பதை 1934ல் ஸ்பெயின் நாட்டில் பிராங்கோ தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்ற எதிர்ப் புரட்சி ஞாபகமூட்டுகிறது. அதே மாதிரி எகிப்திலும் நிலப்பிரபுக்கள் நகிபின் அரசாங்கத்தை எதிர்த்து எதிர்ப் புரட்சி நடத்துவார்கள் எதிர்ப்புரட்சி ... வைத்துக் கொண்டு அதைச் சமாளிக்க முடியாது என்பதற்கு ஸ்பெயின் எதிர்ப்புரட்சி நல்ல சான்று. ராணுவத்துடன் சேர்ந்து மக்களை கிளர்ந்தெழுந்தாலன்றிய எதிர்ப் புரட்சி தோல்வியடையாது. இல்லையேல் நகிப்புக்குப் பதிலாக எகிப்தில் மற்றொரு பிராங்கோ ஆட்சிபீடமேறிவிடுவான். மீண்டும் நிலப்பிரபுத்துவம் ஆதிக்கம் பெற்றுவிடும் (இதைக் கொண்டுதான் பரூக் மன்னர் இன்னும் இரண்டு வருடங்களில்

(12ம் பக்கம் பார்க்க)

மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688
எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள் சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)
கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள் (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)
சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
M/ors SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1
கிளை: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னை தலைவச்சூடும்

"என்ன தம்பி! பெண்டாட்டியை சாகக்கொடுத்தவன் மாதிரி மூஞ்சியை தொங்கப் போட்டுகிட்டு வாரே! வேட்டை கிடைக்கலையா?'

'போ அண்ணே! நீ ஒண்ணு இந்த நாளையிலே எவன் அண்ணே கையிலே மடியிலே பணம் கொண்டு போறான். கொண்டுபோற இரண்டொருத்தனும் பந்தோபஸ்தாக வெச்சுக் கொள்ளுறானுகள். நாம என்னத்தை செய்ய முடியும்? போலீஸ் புலிகள் வேறே கண்ணிலே எண்ணெயை ஊத்திக்கிட்டுத் திரியுதுகள் உன்பாடு எப்படி அண்ணே?'

என்னுடைய கதையும் அதேதான். ஆனா பட்ட சிரமம் வீண் போகல்லே. ஒருத்தனுடைய பர்ஸை அபேஸ் செய்தேன். அவன் கண்டுகிட்டான். அதை அந்த இடத்திலேயே 'தொப்' பென்று போட்டுட்டு கம்பி நீட்டிட்டேன். இன்னொருத்தன் மடியைத் தடவினதில் ஒரு பழைய மடி சஞ்சியும் மூன்றணாக் காசும் கிடைத்தது. ஒரு கால்சட்டைத் துரையிடம் கைவரிசையைக் காட்டினேன். ஒரு அஞ்சு ரூபா நோட்டு முழுசாக் கிடைச்சுது. அதுதான் இன்றைய சம்பாத்தியம்.

நான் ஒரு கங்காணியின் கோட்பையைக் குடைந்து எடுத்த புதையல் இந்தப் படமும் லட்டரும்தான் அண்ணே! அந்த லட்டரிலே உள்ள ஸ்டாம்புக்கு கூட 'ஸீல்' குத்தியிருக்கு. என் அதிர்ஷ்டம் அப்படியிருக்கு!

'அதுக்கு என்னதம்பி பண்றது. தினமும் அதிர்ஷ்டமடிக்குமா?'

'அந்த மனுஷன் அப்படிச் சொல்வாரா? சோம்பேறிப்பய எங்கேயோ படுத்துத் தூங்கீட்டு எழுந்திரிச்சு வாரான்' என்பாரு.

'முதலாளிகள் எல்லாருமே அப்படித்தானே தம்பி! அந்த மனுஷனை மாத்திரம் சொல்லி என்ன பயன்?'

கடியாவும் கொட்டியாவும் சந்தை நாட்களில் டவுண் பக்கம்போய் 'சேப் படித்' தொழில் நடத்துவதுண்டு. அவர்கள்தான் அன்று அப்புத்தளை டவுணில் தாம் தேடிய தேட்டப்பற்றி மேற்கண்டவாறு சம்பாஷித்துக் கொண்டு இராப்பொழுதைக் கழிப்பதற்கும் தமது திருட்டுப் பொருட்களை தலைவனிடம் ஒப்படைத்தற்குமாகத் தமது குகையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களின் தலைவனும் முதலாளியுமான 'கந்தே ரஜா' கப்புவா கள்ளு முட்டியும் கையுமாக அங்கு இருந்தான். இவர்களை கண்டதும் 'ஏண்டா பயல்களே! இவ்வளவு நேரம்? கொண்டு வாங்கடா உங்கள் சம்பாத்தியத்தை இப்படி!' என்று குடி வெறியில் கொக்கரித்தான்

கடியாவும் கொட்டியாவும் ஐந்து ரூபாய் மூன்றணாக் காசையும் பழைய பர்ஸ் ஒன்றையும் ஒரு புகைப் படத்தையும் ஒரு லெட்டரையும் அவனிடம் கொடுத்தனர்

கப்புவா புகைப்படத்தை அங்கு எரிந்துகொண்டிருந்த போத்தல் விளக்கின் ஒளியில் பிடித்துப் பார்த்துவிட்டு 'குட்டி ஜோராயிருக்காளே. யாரோ பணக்காரத் தமிழச்சியாயிருக்கணும்' என்று கூறிக்கொண்டு லெட்டரைப் பார்த்தான். மிஸ்டர் எம். சுந்தரம். கிறீன் எஸ்டேட் என்று எழுதியிருந்த கிறீன் எஸ்டேட்டை அடித்துவிட்டு மல்லிகைத் தோட்டம் என்று விலாசமிடப்பட்டிருந்தது கப்புவாவுக்கு ஆங்கிலம் வாசிக்கவும் எழுதவும் நன்கு தெரியும்.

'யாரடா இந்தப் படத்தைக் கொண்டு வந்தவன்?' என்று கேட்டான் கப்புவா

'நானுங்க!' என்று பதிலளித்தான் கடியா.

'இந்த லெட்டர்?'

'அதுவும் நான்தானுங்க'

'இரண்டும் ஒரே ஆசாமியிடமா இருந்திச்சு'

'ஆமாங்க

'கொட்டியா! இப்படி வா! அன்று நாங்கள் அந்த துரையை வழிமறித்தபொழுது ஒரு பொடிப்பயல் எங்கிருந்தோ தோன்றி எம்மை விரட்டியடித்தானல்லவா?'

'ஆமாங்க'

'அவன் யாரு, என்ன பேரு, எங்கே இருக்கிறான் என்றெல்லாம் அறிந்து வந்து சொன்னாயல்லவா? அதை இன்னொருதரம் சொல்லு பார்க்கலாம்'

''அவன் பெயர் சுந்தரம். அந்த துரை அவனை தனது தோட்டத்திலே சின்னத் துரையாக்கியிருக்கிறானும். அவன் இப்ப மல்லிகைத் தோட்டத்திலேதான் இருக்கிறானுங்க இதெல்லாம் அந்தத் தோட்டத்து எஞ்ஜின் டிரைவரைக் கேட்டு தெரிஞ்சுகிட்ட சமாச்சாரமுங்க''

பேஷ்! அந்த ஆசாமிக்கு பாடம் படிப்பிக்கிறதுக்கு நமக்கு ஒரு நல்ல 'சான்ஸ்' இடைச்சிருக்கு இந்த போட்டோ அவனுடைய காதலியுடையது. இந்த லெட்டரையும் அவள்தான் அவனுக்கு எழுதியிருக்கிருள் இந்த இரண்டையும் உபயோகித்து அந்தப் பயலை ஒரு தனியிடத்துக்கு வரச் செய்து சக்கை போடு போட்டு அனுப்பப் போறேன்.

'அப்பதான் அவனுக்கு புத்தி வருமுங்க. இனிமே நம்ம காரியத்திலே தலையிடாம இருப்பானுங்க'

'கடியா! நீ போயி அந்த லெட்டர் பாட்டையும் பேனாவையும் மைக் கூட்டையும் எடுத்துண்டுவா'




(தொடர் நவீனம்)

மாரிமுத்துக் கங்காணி கோட்பையில் வைத்திருந்து அப்புத்தளையில் 'சேப் படித்' திருடனிடம் பறிகொடுத்த லெட்டரும் போட்டோவும் 'கந்தே ரஜா' கப்புவா கோஷ்டியினர் கையில் சிக்கிக் கொண்டன வென்பதை நாம் சொல்லாமலே வாசகர்கள் யூகித்திருப்பார்கள் கப்புவா ரஞ்சிதம் எழுதிய மாதிரியே ஒரு கடிதம் எழுதி ரஞ்சிதத்தின் புகைப் படத்தையும் வைத்து சுந்தரத்துக்கு போஸ்டில் அனுப்பினான்.

டக்ளஸ்துரை காலையில் கந்தோருக்குப் புறப்படுவதற்கு டிரஸ் செய்துகொண்டிருக்கையில் பங்களாவுக்கு வந்த கடிதங்களை ஆபீஸ் பையன் கொண்டு வந்து துரையின் ரூமில் வைத்தான். துரை தனது கடிதங்களை ஒவ்வொன்றாக உடைத்து வாசித்தார். கடைசிக் கடிதம் சுந்தரத்துக்கு விலாசமிடப்பட்டிருந்தது அனுப்பியவர் பெயரும் அதில் காணப்பட்டதால் அதில் பார்வையைச் செலுத்தினார். 'மிஸ் ரஞ்சிதம் என்றிருந்தது, பெண் சபலமுள்ள துரைக்கு அப்பெயரைக் கண்டதும் அது ஒரு காதல் கடிதமாக இருக்குமென்ற எண்ணம் உண்டாயிற்று பெண் சபலமுள்ளவர்கள் எப்பொழுதும் காதல் கடிதங்களையும் காம நூல்களையும் படிப்பதில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள் துரை அதற்கு விதிவிலக்கல்ல. கவரைக் கிழித்தார் ஒரு போட்டோ தொப்பென்று விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அது ஒரு அழகிய தமிழ் நங்கையின் புகைப்படம். அவளுடைய எழிலைக் கண்டதும் அவர் நாக்கில் ஜலம் ஊறிற்று கடிதத்தைப் பிரித்து வாசித்தார்.

எம்டன்லேன்
வெள்ளவத்தை
3—10—41

காதல!

நான் ஒரு அவசர ஜோலியாக 8ம் திகதி திங்கட்கிழமை ஹட்டனுக்கு வருகிறேன் ரெஸ்ட் ஹவுஸில்தான் இருப்பேன். அங்கு நீங்கள் வரவேண்டாம். காரணம் பிறகு சொல்கிறேன். மாலை 6 மணி சுமாருக்கு டவுணிலிருந்து இரண்டுமைல் தூரத்தில் கண்டி—நுவரேலியா ரோட்டிலுள்ள 'டன்லப்' பாலத்தடியில் எனக்காக காத்திருங்கள். ஜனசந்தடியற்ற அந்த இடமே நாம் நிம்மதியாக இருந்து கதைப்பதற்கு உகந்தது மற்றவை நேரில்.

இங்ஙனம்
உங்கள் காதலி
ரஞ்சிதம்

ஆங்கிலத்தில் பணிமணியான எழுத்துக்களில் அழகாக எழுதப்பட்டிருந்த இக் கடிதத்தை துரை ரஸித்து வாசித்துக் கொண்டிருக்கையில் 'கோக்கி' வந்து 'டீ ரெடிசார்!' என்றான். துரை கையிலிருந்த கடிதத்தையும் படத்தையும் கொண்டு சாப்பாட்டு மேஜைக்கு சென்றார். ரொட்டி சாப்பிட்டு டீயும் குடித்துவிட்டு கந்தோருக்குப் போற அவசரத்தில் அந்த லெட்டரையும் படத்தையும் சாப்பாட்டு மேஜைமீதே வைத்துவிட்டுப் போய்விட்டார் டக்ளஸ்.

மேஜைமீது ஒரு போட்டோ இருப்பதைக் கண்ட அழகு அதை எடுத்துப் பார்த்தான். 'யாரோ ஒரு அழகான தமிழ்ப் பொண்ணு துரைக்குப் பலியாகப் போவுது' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். அன்று சின்னத்துரை சுந்தரத்துக்கு கூறியவற்றை ருசுப்படுத்த எண்ணியவனபோல் அந்த போட்டோவையும் லெட்டரையும் கொண்டுபோய் சுந்தரத்திடம் நீட்டினான்

சுந்தரம் படத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டான். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சமாளித்துக் கொண்டு கவரைப் பார்த்தான் தனது விலாசம் அதில் இருந்தது. கடிதத்தைப் பார்த்தான் ரஞ்சிதம் எழுதியிருக்கிறாள் கப்புவா ரஞ்சிதத்தின் கையெழுத்தைப் பார்த்து அதேபோல எழுதியிருந்தாலும் வருடக்கணக்கில் அவளுடைய கையெழுத்தை வாசித்துப் பழகிய சுந்தரத்துக்கு அவளுடைய கையெழுத்து தெரியாமல் போய்விடுமா? ரஞ்சிதத்தின் கையொப்பத்தையும் கப்புவா அப்படியே 'இமிடேட்' பண்ணியிருக்கிறான். ஆனால் சுந்தரம் அது தன் காதலியின் கையொப்பமல்லவென்பதை சந்தேகமறத் தெரிந்து கொண்டான

"ரஞ்சிதம் ஹட்டனுக்கு வாறதாவது ரெஸ்ட் ஹவுஸில் என்னைச் சந்திக்க முடியாது இரண்டு மைலுக்கப்பால் ஜனசந்தடியில்லாத 'டன்லப்' பாலத்தடியில் சந்திப்பதாவது! என்னை வஞ்சிப்பதற்காக யாரோ சூழ்ச்சி செய்கின்றனர். எனக்கு விரித்த வலையில் மாட்டிக் கொள்வதற்கு டக்ளஸ் தயாராயிருக்கையில் நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் சுந்தரம். தனது சூட்கேஸின் அடியிலிருந்த ரஞ்சிதத்தின்படம் எப்படி சூழ்ச்சிக்காரர் கையில் சிக்கிற்று என்பதுதான் சுந்தரத்துக்கு புரியாத புதிராக இருந்தது. 'இந்தப் படம்போனால் இதைப் போல் இன்னும் நூறு படம் எடுத்திட முடியாதா?' என்று அவன் மனம் சொல்லிற்று. ரஞ்சிதமே

(11ம் பக்கம் பார்க்க)



மறு நிமிஷம் முகமூடியணிந்த ஒரு உருவம் எங்கிருந்தோ திடீரென்று தோன்றி கப்புவாவின் உயர்த்திய கையை ஒருகையால் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் அவனுடைய மார்பில் ஓங்கிக் குத்தியதும், "மகே அம்மே" என்று கூறிக் கொண்டு கப்புவா பின்னால் நகர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொழிலாளர் கூலியைக் குறைக்காதே

## தொழிற்சங்க கூட்டு மகாநாட்டின் அறிக்கை

தோட்டத் துரைமார் சங்கம் தொழிலாளர்களின் கூலியைக் குறைக்க முயற்சி செய்வது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிற் சங்க சம்மேளனம், தொழிலாளர் சம்மேளனம் ஆகிய ஸ்தாபனங்களின் கூட்டு மகாநாடு கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்திருக்கிறது.

மேற்கூறிய மூன்று ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இம் மகாநாடு தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைப்பதை ஆட்சேபிக்கிறது.

துரைமார் சங்கத்தின் கூலி வெட்டுத் திட்டம் அமுலுக்குவந்தால் ரப்பர் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தில் 8.3 சதவீதமும், தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தில் 32.2 சதவீதமும் வெட்டப்படும். இது ஏற்கனவே தொழிலாளருக்கு கிடைக்கும் குறைந்த சம்பளத்தைப் பெருமளவில் குறைப்பதாகும்.

எங்கள் அபிப்பிராயப்படி, இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளமே போதாமலிருக்கிறது எனவே நாங்கள் இக் கூலி வெட்டை வன்மையாக எதிர்க்கிறோம்.

கூலியை வெட்டவேண்டுமென்று துரைமார் சங்கம் சம்பள நிர்ணய சபையில் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை வாபஸ் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அடிப்படைச் சம்பளம் குறையாது பார்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

பின்னர் விரிவான முறையில் சம்பள வெட்டைக் கொண்டு வருவதற்காகவே இப்பொழுது கூலி குறைக்கப்படுகிறதென்பதை தொழிலாளருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே முதலாளிகளின் இத்தாக்குதலைச் சமாளிக்க தொழிலாளர் ஒன்றுதிரள வேண்டும்.

அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்காக நாங்கள் ஒரு சப் கமிட்டியை நிறுவியிருக்கிறோம்.

ஒப்பம்

ஏ. அஸீஸ் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக)

யு. ஈ. பெரேரா (தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பாக)

எம். ஜி. மெண்டிஸ் (தொழிற் சங்க சம்மேளனத்தின் சார்பாக)

1952 செட்டம்பர் 1உ.

### காங்கிரஸில் சேருங்கள்

"இலங்கைவாழ் ஏழைத் தொழிலாளர்களுக்காகப் போராட ஓர் இயக்கம் உண்டென்றால் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாகத்தான் இருக்கமுடியும். இவ்வியக்கம் தொழிலாளர் வர்க்கத்துக்கு உண்மையுடனும், தூய்மையுடனும் பாடுபட்டுவருகிறது. தொழிலாளர்க்கு விமோசனத்தை தேடிக்கொடுக்கும் இந்த ஸ்தாபனத்தில் தொழிலாளர் ஒவ்வொருவரும் கட்டாயம் சேரவேண்டும்" இவ்வாறு பொல்காவெலையைச் சேர்ந்த உடப்பாலைத் தோட்டத்தில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் திரு எஸ். தொண்டமான் பேசுகையில் கூறினார்.

பின்னர் திருவாளர் டி. எம். இராமசாமி, எஸ். எஸ். பெர்னாண்டஸ் ஆகியவர்கள் இன்று நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கத்தைப்பற்றியும், தென்னந்தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களுக்கு செய்யும் கொடுமைகளைப்பற்றி, சம்பள வெட்டைப் பற்றியும், தொழிலாளர்கள் உடன் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

### கள்ளத் தோணி சமாச்சாரம் ஒரு சூழ்ச்சியே!

இலங்கை இந்திய காங்கிரஸ் பதுளை ஜில்லாக் கமிட்டியின் பொதுக் காரியதரிசி திரு ஏ. கே. சந்தசாமி பின்வருமாறு எழுதுகிறார்:—

பதுளை பொரக்கொல்லை தோட்டத்தில் முன்பு வேலை செய்துகொண்டிருந்த அருணாசலம் மகன் வேலு என்பவரை சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் பதுளை கச்சேரியில் தற்சமயம் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் திரு நவரட்னம் தமது வீட்டு வேலைக்காக கோண்டாவில் கிழக்கிற்கு அவரது தகப்பனார் இல்லத்திற்கு அனுப்பி வைத்தாராம். இப்பொழுது மீண்டும் தாய், தந்தையர்களைக் காண விரும்பி வேலை செய்த இடத்திலிருந்து திரும்பி வரும்போது கள்ளத் தோணியிலிருந்து வந்தவர் என்பதாக சந்தேகப்பட்டு கைதுசெய்து ஊர்காவற்றுறை கேம்பில் வைத்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது.

அவரது தாய், தந்தையர்கள் பதுளைப் பகுதி தெளிவத்தை குரூப் பொரக்கொல்லை தோட்டத்திலிருக்கின்றனர். இவருக்கும் தோட்டத்தில் பற்றுச்சீட்டு முதலிய ஆதாரங்கள் உண்டு. அவரது கடிதம் கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விபரம் கொடுத்துள்ளோம்.

இதேபோன்றுதான் இன்னும் எத்தனையோ விபரமறியாத மக்களை அரசாங்கம் கள்ளத் தோணியிலிருந்து வந்தவர்களென குற்றம் சாட்டி நாடு கடத்த முயன்றுவருகின்றனர். உரிமை வேண்டி சத்தியாக்கிரகம் செய்பவர்களின் கருத்தை இந்த நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ளாவண்ணம் பலகமையை வளர்க்க அரசாங்கம் செய்துவரும் சூழ்ச்சி என்பதை பொதுமக்கள் உணரவேண்டும்.

### சங்கக் கடைப் பணம் அம்போகரா?

இங்கிரியாவைச் சேர்ந்த ஹலவத்துறை குரூப்பில் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு கூட்டுறவு சங்கக் கடை திறக்கப்பட்டது. இக்கடையில் பங்குதாரர்களாய் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் மேற்படி தோட்டத் தொழிலாளர்களே. ஒவ்வொரு தொழிலாளரும் முதலுக்கு ஆதாயம் கிடைக்குமென்றெண்ணி நூறு, ஐம்பது என்று பங்குகளை வாங்கினார்களாம். கடை சில காலம் நடைபெற்றன. பின்னர் நஷ்டமடைந்து விட்டதாகக் கூறி கடையை ஏலம் விடப்போகும் தருவாயில் இங்குள்ள ஒரு செட்டியார் கடையின் மானேஜர் முன்வந்து தோட்ட மானேஜ்மெண்டாரிடம் கலந்து பேசி கடையை தமது சொந்தத்தில் எடுத்துக்கொள்வதென்றும், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய எண்ணாயிரத்தி சொச்சம் ரூபாயையும் ஒரு வருடத்தில் கொடுத்துவிடுவதென்றும் ஒப்பந்தம் செய்து கொண்டார்களாம்.

ஒரு வருட தவணையில் கொடுப்பதாகக் கூறப்பட்ட பணம் தவணைப் பிரகாரம் கொடுக்கவில்லையாம். சில தொழிலாளர்களின் இடைவிடாத சரச்சலின்மீது அதுவும் இரண்டு வருடம் கழித்து நூற்றுக்கு அறுபது வீதம் ஒரு சிலருக்கு மட்டும் கொடுத்தனராம். பாக்கி பணம் மூன்று மாத தவணையில் கொடுப்பதாகச் சொல்லி மூன்று மாதத்திற்கு மேலாகியும் இன்னும் கொடுக்கவில்லை என்று அறியப்படுகிறது.

இது விஷயமாக தோட்டத்துரையிடம் இ. இ. கா. தோட்டக் கமிட்டி முறையிட்டபோது, இது தாம் மேற்படி தோட்டத்திற்கு வருமுன்னர் நடந்த விஷயமென்றும் எதற்கும் தாம் விசாரிப்பதாக தெரிவித்தாராம்.

இது விஷயமாக தற்போது இங்கிரியா ஜில்லா கமிட்டி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக தெரிகிறது.

### மிரிசேனையில் தொழிலாளர் கூட்டம்

களுத்துறை ஜில்லாவைச் சேர்ந்த மிரிசேனைத் தோட்டத்தில் கடந்த 28-8-52ல் தொழிலாளர்களின் பொதுக் கூட்டமொன்று ஜில்லாக் கமிட்டித் தலைவர் திரு கே. ஆர். கருப்பையா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஆண், பெண் அனைவரும் திரளாக விஜயம் செய்திருந்தனர்.

தலைவர் திரு கருப்பையா பேசுகையில் இலங்கை இந்திய காங்கிரஸின் கொள்கைகளையும் சத்தியாக்கிரக போராட்டத்தின் புனிதத் தன்மையையும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஜில்லாப் பிரதிநிதி திரு எஸ. காளிமுத்து, ஜில்லாக் கமிட்டி உப-தலைவர் திரு ஐ. வி. ஐயன், திரு என். கார்த்திகேயன் ஆகியோர் பேசிய பின்பு தோட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### விக்கிலியா தோட்ட கமிட்டி தெரிவு

பலாங்கொடையைச் சேர்ந்த விக்கிலியா தோட்ட பணிய கணக்கில் ஜில்லா கூட்டுக் காரியதரிசி திரு வி. எம். சுப்பையா தலைமையில் தொழிலாளர் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது.

ஜில்லா பிரதிநிதி திரு கே. ஆர். சுப்பையா பேசுகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கைக்கொண்டுள்ள 13-புள்ளி ஒப்பந்தம் தொழிலாளர் வர்க்கத்துக்கே ஒரு வரப்பிரசாதம் என்று கூறினார்.

திரு டி. டேவிட் தேசியக் கீதம் பாடினார்.

பின்னர் தோட்டக் கமிட்டி உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சேர் ஜான் கவர்னர் ............

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### மற்றும் விவரங்கள்

விஷயம் இத்துடன் முடிந்துபோகவில்லை. சேர் ஜோன் யு. என். பி. கட்சியில் பிரசார பகுதியின் தலைவராக இருப்பதால், அரசாங்கக் கொள்கையை அடிக்கடி தாக்கிக்கொண்டிருக்கும் "இலக்கய" என்ற பத்திரிகைக்கு யு. என். பி. வாலிபர் சங்கத் தலைமைக் காரியாலயத்தை உபயோகிக்க அவர் ஏன் அனுமதித்தார் என்பதற்கு அவரிடம் விளக்கம் கோரப்படும்.

சேர் ஜோனின் விளக்கத்தைக் கேட்க யு. என். பி. காரியக் கமிட்டியின் அவசரக் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெறும் பிரஸ் ... சேர் ஜோனின் நெருங்கிய சகாக்கள் சிலர் கட்சிக்குள் கோஷ்டிகள் நிறுவினார்கள் என்று குற்றம் சாட்டப்படுவார்கள்.

இப்பொழுது கட்சிப் பெயரால் நடைபெறும் பத்திரிகைகளுக்கும் கட்சிக்கும் இனிமேல் சம்பந்தம் கிடையாதென்று கட்சி அறிவிக்கும். அவைகளின் ஆசிரியர் குழாம் மாற்றப்படும்.

நிதி மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்தனாவுடன் நெருங்கிய தொடர்புள்ள ஒரு வாராந்த சிங்களப் பத்திரிகை கட்சிப் பத்திரிகையாக்கப்படலாம். யு. என். பிக் கட்சிக்குள் தகராறுகளும், கோஷ்டிப் பூசல்களும் தொடர்ந்து புகைந்து கொண்டிருக்குமென்

சகலவிதமான

இன்ஷூரன்ஸ்

சேவைகள்

முக்கிய பிரதேசங்களிலெல்லாம் கிளைகளையும், ஏஜன்ஸிகளையும் கொண்டு சென்ட்ரல் யூனியன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட் அனைவருக்கும் எல்லாவிதமான தேவைகளுக்கும் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு அளிக்கிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, தெல்லிப்பழை, புத்தளம், அனுராதபுரம், திரிகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, ஹட்டன், மாத்தளை, பேராதனை, நாவலப்பிட்டி, மாவனல்லை, காலி, ஹக்மன, நீர்கொழும்பு, பலாங்கொடை ஆகிய இடங்களிலிருக்கும் எங்கள் காரியாலயங்களில் கலந்து ஆலோசியுங்கள்.

ஆயுள் - நெருப்பு-கப்பல்

விபத்துக்களுக்கும் வேறு அடக்கமான தேட் பார்ட்டி பாலிஸிகளுக்கும், எல்லாவிதமான மோட்டார் வாகனங்களுக்கும் போனஸ் லாபம் முதலியவற்றுடன் சலுகைகள் செய்யப்படும்

தலைமை ஆபீஸ்:

Central Union Insurance Co., Ltd.,
30, UPPER CHATHAM STREET,
COLOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக வேண்டுமாம்

## தமிழர்கள் சிங்களம் கற்றுக் கொள்வார்கள் ?

### “சிங்கள ஜாதி” கூறும் நொண்டிக் காரணங்கள்

(“சிங்கள ஜாதிய” என்ற பிரபல சிங்கள வாரப் பத்திரிகையில் 6-9-52ல் இதழில் “சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக வேண்டும்” என்ற தலைப்புடன் வெளியான கட்டுரையின் மொழி பெயர்ப்பு)

சிங்களமும் தமிழுமே இலங்கை மக்கள் பேசும் பிரதான மொழிகள். உலகில் சிங்களம் பேசும் மக்கள் வசிக்கும் ஒரே நாடு இலங்கைதான். ஆனால் தமிழ்மொழியோ இலங்கை தவிர இந்தியா, மலேயா, பர்மா, ஆபிரிக்கா ஜாவா, சுமாத்ரா, போர்னியோ, பீஜி ஆகிய நாடுகளில் பேசப்படுகிறது. சுருங்கக்கூறின் தமிழ் சர்வதேச மொழியாகிவிட்டதென்று கூறுவது மிகையாகாது.

எனவே இலங்கையில் சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாக்குவதில் அர்த்தமில்லை. சிங்கள மக்களின் தொகை தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையைவிட 5 மடங்கு அதிகமாகும். ஆகவே சிங்கள மொழிக்குள்ள சம அந்தஸ்தைத் தமிழுக்கு கொடுப்பது எப்படி நியாயமாகும்? இதன் விளைவு தமிழ் மொழி வியாபிப்பதும் சிங்களத்திற்கு ஏற்கனவே இருந்த ஸ்தானம் மறைந்துபோவதும் தான்.

இன்று ஏற்பட்டுள்ள பிரச்னை சிங்களம் மட்டும் ராஜீய பாஷையாக்கப்பட்டால் இலங்கைத் தமிழர்கள் போர்க்கொடி உயர்த்துவார்களென்று ஆட்சியாளரும், அவர்களின் கையாட்களும் பிரசாரம் செய்வதுதான் ஆயினும் அது உண்மையன்று. சிங்களம் அரசாங்க மொழியாக்குவதை எதிர்க்கும் சிறுபான்மையோர் யார்? அவர்கள் எப்பொழுது எதிர்த்தார்கள்? தமிழ்ப் பேசும் முஸ்லீம்கள் கண்டித்தார்களா? அவர்கள் இது சம்பந்தமாக எதிர்ப்புக் காட்டவில்லையெனில் உண்மையில் இதில பொறிய பேதத்தைப் பற்றிய பிரச்னையே கிடையாது. அடுத்தபடியாக தமிழர்களைப் பற்றிய பிரச்னையும் அதேதான். சிங்களத்தை ராஜீய மொழியாக்குவதை தமிழர்கள் எதிர்த்தால், அது அசாதாரணமாகும். சுமார் 4 நூற்றாண்டுகளாக இலங்கை விதேசிகளின் ஆதிக்கத்தின் கீழிருந்தது. அப்பொழுது ஏனைய இனத்தினர்களிலும் பார்க்க தமிழர்கள் முதலில் ஆங்கிலம் கற்று அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்தார்கள் அந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மொழிக்கும் அதன் கலாசார வளர்ச்சிக்குப் ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்று விதேசிய ஆட்சியை எதிர்த்து அவர்கள் போராடினார்களா? அல்லது அதுபற்றிய தங்களின் குறைகளை எடுத்துக் கூறுவதற்காவது முனைவந்தார்களா? அன்னிய ஆதிக்கத்தினின்று விடுதலையடைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் சிங்களவாகவே சிங்கள மொழியை ராஜீய பாஷையாக்கவேண்டுமென்று கோரினால், அதை எதிர்ப்பதற்கு நியாயமே கிடையாது மேதசாபிமானமுள்ள இலங்கையில் தமிழர்கள் இதனை அங்கீகரிப்பார்களே தவிர எதிர்க்கமாட்டார்கள் எனவே சிங்களவர் அல்லாத எவரும் சிங்களத்தை ராஜீய பாஷையாக்க வேண்டுமென்பதை எதிர்க்கமாட்டார்களென்பது அனைவருக்கும் புலனாகும்.

அப்படியானால் எதிர்ப்பவர்கள் யார்? அன்னிய நாகரீகத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் பிரபல சிங்களவர்களும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும்தான். சிங்களம் அரசாங்க மொழியானால், அவர்கள் நாட்டை விட்டு ஓட வேண்டியதேற்படும். விழிப்புற்ற சிங்கள மக்களிடம் சிங்களத்தை அரசாங்க மொழியாக்கக் கூடாதென்று நேரடியாகக் கூற அவர்களுக்குத் துணிச்சலில்லை. ஆகவே பட்டம் பதவிகளுக்காக ஆளும் கட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழர்கள் இரண்டொருவரைக் கொண்டு இதற்கு எதிர்ப்பைச் சிருஷ்டிப்பதுதான் அவர்கள் செய்திருக்கும் சதி. சமீபத்தில் திரு பொன்னம்பலம் காட்டிய எதிர்ப்பும் இதைப்போன்றதே.

சிங்களவர் ஆங்கிலத்தையும் ஹிந்தியையும் கற்றுக் கொள்வதில் காட்டும் ஆர்வத்தைக் காட்டிலும் தமிழர்கள் சிங்களம் கற்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். வட. கீழ் மாகாணங்களில் தமிழர்கள் சிங்களம் கற்பதற்காக தாங்களே முன்வந்து பாடசாலைகள் நிறுவியிருப்பதும், வேறு சில மாகாணங்களில் குழுக்கள் நிறுவி வகுப்புகள் நடைபெறுவதும் அனைவருக்கும் தெரியும். நானும் இவைகளுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியிருக்கிறேன்

சிங்களத்தை ராஜீய மொழியாக்க வேண்டும் என்று நேரடியாகக் கிளர்ச்சி செய்வதுதான் இன்று வளர்க்கப்பட வேண்டிய இயக்கம்.

தமிழனாகிய நான் கூறக்கூடிய ஒரு விஷயம் என்னவெனில், சிங்களவர்கள் தங்களை நாகரீகத்தையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கிருக்கும் ஒரே வழி சிங்கள மொழியை முடிந்தமட்டும் வியாபிக்கும்படி செய்வதுதான். தமிழ் மொழியைப்பற்றி நான் கவலைப்படவில்லை. காரணம் அது ஒரு சர்வதேசீய மொழியாக மாறியிருப்பதே சிங்களப் பிரமுகர்களை சிங்களத்தை பின்னால் தள்ளுவதுதான் வருந்தக்கூடிய விஷயம்.

### இந்து சனமார்க்க சங்கம்


வத்தளை—உனுப்பிட்டி இந்து சனமார்க்க சங்கத்தின் நான்காவது வருடாந்தக் கூட்டம் கடந்த 31-8-52 ல் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருடத்திற்குரிய உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.


நான்கு தலைமுறை பரம்பரை வைத்தியமும்
40 வருட அனுபவமும் வாய்ந்த

**டாக்டர் A. S. டானியல்**

**அவர்களின்**

நான்காவது சுற்றுப் பிரயாணம் பதுளை, பண்டாரவளை, ஹட்டன், நார்வுட் வாசிகளுக்கு ஓர் அரிய தருணம்.



பதுளை, 10, 11ந் தேதிகளில் ஜெமினி ஹோட்டல்.

பண்டாரவளை, 12, 13, 14 ந் தேதிகளில் சிங்கிரி ஹோட்டல்.

ஹட்டன், 15, 16-ந் தேதிகளில் ...ரோ ஹோட்டல்.

நார்வூட், 17ந் தேதி 99. பஜார்தெரு

ஒவ்வொரு மாதமும் மேற்கண்ட இடங்களில் மேற்கூறிய தேதிகளில் தங்குவார்கள்

உங்கள் வியாதி எதுவானாலும் நேரில் தெரிந்து மருந்து பெற்று சுகமடையும்படியான அரிய தருணத்தைத் தவறவிடாதீர்கள்.

ஆயுர்வேத டாக்டர் A. S. டானியல்

**மலையாள மெடிகல் ஹால்**

179, செட்டியார் தெரு, கொழும்பு.


## கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறவேண்டும்

### குன்றக்குடி ஆதீனகர்த்தர் வற்புறுத்தல்

தமிழ் நாட்டிலுள்ள கோவில்களில் தமிழில் தான் அர்ச்சனை செய்யவேண்டுமென குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் வற்புறுத்தினார் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்வதற்காக தமிழ் மக்கள் அனைவரும் முன்வர வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

மதுரை அருள்நெறித் திருக்கூட்டத் தொடக்க விழாவிற்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத் தலைவர் தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் தலைமை வகித்து பேசுகையில் பேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:—

‘தன்னலமுடையவர்கள்—சுயநல சூழ்ச்சிக்காரர்கள் தவறு செய்தார்கள். எத்தனையோ கற்பனைகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. தேவையில்லாத புராணங்கள், விக்ரகங்கள் இருக்கத்தான் செய்கின்றன். தமிழில் அர்ச்சனை செய்தாலதான கோவில் வாழும் என்பதை பல ... நான் கூறியிருக்கிறேன்.

மனிதனுடைய வெட்பு நிறைந்த மனதை குளிமை நிறைந்ததாக மாற்றியது தமிழாகும் தமிழர்கள் என்று விழித்துக் கொள்கிறார்களோ அன்று கோவில்களில் தமிழ் குரல் ஒலிக்கும். இழுக்கு நிறைந்த புராணம் எங்களுக்கு உகந்ததல்ல. எதிரிகளால் இடைக்காலத்தில் நுழைக்கப்பட்டு விட்டது. இதனால் தமிழ் தரம் குறைந்து விடாது.

திருப்புகலூர் போன்ற புராணத்தை கொளுத்த வேண்டும் என்று நான் மூன்று ஆண்டுகளுக்கு முன் கூறியிருக்கிறேன். தமிழ் வாழவேண்டும். இதன் காரணமாக நாஸ்திகன் என்றுகூட நான் பெயர் பெற்றவன் குன்றக்குடி கோவில்களில் அர்ச்சனை ஆராதனை தமிழில் நடைபெறுகிறது. கோவில்களை சுத்தம் செய்யும் பணியிலும் ஈடுபடப் போகிறோம். தமிழ் பணியிலே எல்லோரும் சேவை செய்ய முன்வர வேண்டும். தொண்டர்கள் அனைவரும் பாடுபட முன்வர வேண்டும். திருக்குறள் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லியாகத் அலிகான் கொலையின் மர்மம்!

## பாகிஸ்தானில் பரபரப்பு

## பேகம் லியாகத் அலிக்கு வீட்டிலேயே சிறை?

பாகிஸ்தான் மாஜி பிரதமரின் மனைவி பேகம் லியாகத் அலிகான் பற்றியும் லியாகத் அலி கொலை சம்பந்தமாக நடக்கும் திரைமறைவு விஷயங்கள் பற்றியும் பம்பாய் "பிளிட்ஸ்" பத்திரிகை எழுதியிருக்கும் சில திடுக்கிடும் தகவல்கள் பின்வருமாறு:-

பாகிஸ்தான் சர்க்காரின் ஜன்ம விரோதியாக பேகம் லியாகத் அலி மாறிவிட்டார் ஜின்னா இறந்த பிறகு அவருடைய சகோதரி



லியாகத் அலிகான்

பாத்திமா ஜின்னாவும் இதே மாதிரியாக லியாகத் அலி சர்க்காரின் விரோதியாக இருந்தார். பாத்திமா ஜின்னாவை வீட்டிலேயே சிறையில் வைத்திருந்தார் லியாகத் அலி. இப்போது லியாகத் அலியின் மனைவி பேகம் லியாகத் அலிகானும் அதே கதி ஏற்பட்டு ஏறக்குறைய வீட்டிலேயே சிறைவைக்கப்பட்டிருக்கிறார்.

### பாஸ்போர்ட் மறுப்பு

எனது குமாரர்களை மேல் நாட்டில் படிக்கவைக்க அழைத்துச் செல்ல பேகம் லியாகத் அலி முடிவு செய்திருந்தார். பாஸ்போர்ட் கிடைக்காதபடி பாகிஸ்தான் சர்க்கார் ரகசிய உத்தரவு அனுப்பி தடுத்துவிட்டது.

"உமது கணவர் லியாகத் அலி இறந்து ஒரு வருஷம் கூட ஆகவில்லை அதற்குள் வெளிநாடு போவதென்றால் நாட்டின் நலனுக்குப் பாதகம் நேரிடும் ஜின்னா இறந்தும் பாத்திமா ஜின்னாவும் இதேமாதிரி போகவிரும்பினார் இதே காரணத்தால் உமது கணவர் லியாகத் அலி பாத்திமா ஜின்னாவை தடுத்துவிட்டார். ஆகவே நாட்டின் நலனைக்கருதி நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும்' என்று பேகம்லியாகத் அலியிடம் சொல்லிவிட்டார்களாம்.

இதைக்கேட்டு பேகம் லியாகத் அலிக்கு அளவு கடந்த ஆத்திரம் பற்றிக்கொண்டது வெளிப்படையாக சர்க்காரை ஆத்திரந்தீர திட்டுகிறார்.

வெளிநாடு சென்று அங்கேயே வாழ்நாள் பூராவையும் கழிக்க அவர் விரும்புகிறார்.

### சதிவழக்கு சாட்சியம்

ராவல்பிண்டி சதிவழக்கில் குற்றம் சாட்டப்பட்டோர் தரப்பில் கீழ்க்கண்டவாறு சாட்சியம் அளித்தார்கள்:-

"பாகிஸ்தானுக்காக அமெரிக்காவில் எத்தனையோ கோடி ரூபாய்களுக்கு யுத்த தளவாடங்கள் லியாகத் அலி வாங்கினார். அமெரிக்காவிலுள்ள வியாபாரிகள் லியாகத் அலி பெயராலும் பேகம் லியாகத் அலியின் பெயராலும் தனியாக பாங்கியில் கணக்குவைத்து கோடிக் கணக்கான பணத்



பேகம் லியாகத் அலிகான்

தை வைத்திருக்கிறார்கள். பாகிஸ்தானின் பணத்தை இப்படி சூறையாடி பங்கு போட்டுக்கொண்டார்கள்"

இவ்வாறு அந்த வழக்கில சிலர் சாட்சியம் கூறினார்கள் இதேமாதிரியாக சில மந்திரிகளும் கராச்சியில் ரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள.

அமெரிக்கா கானடா நாடுகளில் உள்ள பாங்கிகளில் பேகம் லியாகத் அலியின் பெயரால் கோடிக்கணக்கான டாலர்கள் இருப்பதாகவும் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு சாகும்வரை அமெரிக்காவிலேயே இன்பமாக வாழ்க்கை நடத்தலாமென்று பேகம் லியாகத் அலி விரும்புவதாகவும் பிள்ளைகளின் படிப்பு என்ற பெயரால் அமெரிக்காவில் குடியேற சாலஜாப்பு கூறுவதாகவும் பாகிஸ்தான் மந்திரிகள் கூறுகிறார்கள.

"இதெல்லாம் சுத்தப் பொய்" என்று பேகம் கோபத்தோடு மறுத்துவிட்டார்,

"என் கணவர் எங்களுக்கு தம்படி கூடவைக்காமல இறந்துவிட்டார். சர்க்கார் கொடுக்கும் இந்த சொற்ப பென்ஷன் தொகையை வைத்துக்கொண்டுதான் நானும் என் பையன்களும் வாழ்க்கை நடத்த நேரிட்டிருக்கிறது" [illegible]

வெளிநாடு அனுப்ப பாகிஸ்தான் சர்க்கார் மறுத்துவிட்டது.

... சாட்டுகள் உண் ... பேகம்

லியாகத் அலியை வெளிநாடு அனுப்ப பாகிஸ்தான் சர்க்கார் மறுத்துவிட்டது.

அனுப்பாததற்கு இன்னொரு காரணம் என்னவென்றால் லியாகத் கொலை பற்றி வெளிநாடுகளில் போய் பிரசாரம் செய்துவிடுவாரோ என்ற பயமும் உண்டு!


### கொலைஞனைக் கொலை செய்ததும் ஓர் சதி

எகிப்து பத்திரிகை நிருபர் ஒருவரிடம் பேகம் லியாகத் கூறியதாவது:- "எனது கணவர் சுரண்டலுக்கும் காலனி முறைக்கும் விரோதியாக இருந்ததால் பிரிட்டிஷாரும் அவர்களின் கைக்கூலிகளான சில பாகிஸ்தானிகளும் அவரைத் தீர்த்துக் கட்டிவிட்டார்கள்

அவர் ராவல்பிண்டியில் பொதுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது அவரைச் சுட்டுக் கொலை செய்த கொலைஞனை அதேவிடத்தில் போலீஸார் சுட்டுத் தள்ளிவிட்டனர் சதியைப்பற்றிய தகவல்களையும் சாட்சியங்களையும் அடியோடு மறைத்துவிடுவதற்காகவே ஸ்தலத்திலேயே கொலைஞனையும் கொலை செய்துவிட்டார்கள். எனது கணவர் கொலை செய்யப்பட்டதற்காக இதுவரை ஒருவரும் கைது செய்யப்படவில்லை'

### விமான விபத்து மர்மம்

சமீபத்தில் பயங்கர விமான விபத்து ஏற்பட்டதல்லவா? அந்த ராணுவ விமானம் நொறுங்கி அதுபற்றி பாகிஸ்தானில் பெரும் வதந்தியாக இருக்கிறது. பயிரானவர்களில் ஒருவர் பாகிஸ்தான் ரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நவாப்ஜாடா ஜக் ஜார்ஜ்-உத்-தீன் பாகிஸ்தான் கொலைபற்றி தீர விசாரித்து மிகவும் முக்கியமான ரகசியங்களைக் கண்ட தஸ்தாவேஜுகளுடன் வந்துகொண்டிருந்தாராம். ஆகவே இந்த விமானவிபத்தில் பெரும் சூழ்ச்சி நடந்திருக்கிறது என்று பாகிஸ்தானில் வதந்தி உலாவுகிறது."





**சுதந்திரன் சந்தா விபரம்**

| | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| 1 வருடம் | 8-00 | 8-0-0 |
| 6 மாதம் | 4-50 | 4-8-0 |
| தனிப் பிரதி | 0-15 | 0-2-6 |

சந்தா முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும் பத்திரிகை உள்ளூரில் சனிக்கிழமைகளில் கிடைக்கும்படி தபாலமூலம் அனுப்பிவைக்கப்படும்.

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194எ, கட்டாதெரு, கொழும்பு-12

**இந்திய அரசியலை பாரபட்சமின்றி அலசும் ஓர் பத்திரிகை!**

அரசியல் சூட்சிகளை அம்பலப்படுத்தும் துணிவுள்ள வாரத்தை.
தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களின் ஓரே ஏடு!
ஒரு வாரத்தில் உலக நிகழ்ச்சிகளை ஆராயும் நடுநிலை பத்திரிகை!

இதுதான்

**"மறுமலர்ச்சி"**

அரசியல சமுதாய வாரப்பத்திரிகை
பிரதம ஆசிரியர் "பாஷா' ஆசிரியர் A M யூசுப்
ஸ்தாபகர் ஹாஜி அப்துல் காதர் ஜமாலி
தனி பிரதி விலை சதம 20
ஆண்டு சந்தா ரூ. 7/- ஆறு மாதம ரூ4/-
இலங்கை முழுவதும் விற்பனை செய்ய சப் ஏஜண்டுகள் தேவை


சோல் ஏஜண்டுகள்:-
**மோகன்குமார் அன்...**
த பெ: 1201, கொழு...

**இரும்புபணப் பெட்டிகள்**

லண்டன் நகர ஜோன்டான லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை

1795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிக பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திரசிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.



[illegible]தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை.

**டொட்வெல் & கம்பெனி லிமிடெட்**

ஆபீஸ் பொருட்கள் விற்பனை பகுதி
18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை — கொழும்பு
போன்: 2301

**வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்த...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### கல்வி மந்திரியின் கவனத்திற்கு

இன்றைய இலங்கையி லுள்ள பாடசாலைகள் யாவற்றிலும் சமய பாடம் சட்டபாடமாக கற்பிக்கப்படுகின்றதென்பது யாவருமறிந்ததே! இங்கேயில் காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் சமய பாடம் கற்பிக்கப்படுகின்றது.

இங்கு "இஸ்லாம்" பாடம் கற்பிப்பதற்கு ஓர் மௌலவி கண்டிப்பாக நியமிக்க வேண்டும் என பல முறை பத்திரிகைகள்மூலமாக எழுதியும் கேட்டும் இதுவரை கனம் கல்வி மந்திரியார் அவர்களோ அல்லது மற்றைய முஸ்லிம் பிரதிநிதிகளோ கவனம் எடுத்ததாக தெரியவில்லை "இஸ்லாம்" பாடம் ஓர் திறமைவாய்ந்த மௌலவி இல்லாமல் மாணவர்களால் திருப்திகரமாக கற்க முடியாது என்பது யாவரும் அறிந்ததே. இன்னும் தற்பொழுது கேள்வி பத்திரங்களில் வரும் கேள்விகளோ மிகவும் கடினமாகக் காணப்படுகின்றது. தற்பொழுது இங்கு இப்பாடத்தை ஓர் ஆசிரியரே ஏற்று படிப்பிப்பதாகத் தெரிகின்றது. இருந்தும் மாணவர்களால் திருப்தியாக கற்க முடியாமலிருக்கின்றது.

ஆகவே! இனிமேலாவது கல்வி மந்திரியாரும் மற்றைய முஸ்லிம் பிரதிநிதிகளும் கவனம் எடுப்பார்களா?

"திருத்தத் தீரன்"
காத்தான்குடி

### கலவன் பாடசாலையின் அலங்கோலம்

மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த டெஹகஸ்ப எனும் இடத்தில் மெதொடிஸ்த கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த சிங்களம், தமிழ் கலவன் பாடசாலை ஒன்றுண்டு அப்பாடசாலையில் சிங்களப் பகுதிக்கு எட்டு ஆசிரியர்களிருக்கிறார்கள். தமிழ்ப் பகுதிக்கு ஓர் ஆசிரியரே அவரும் ஐந்து வகுப்புகள் வைத்துக்கொண்டு அவஸ்தைபடுகிறார். இப்பாடசாலை தலைமை ஆசிரியர் சிங்களவர் ஒரு சொல்லாவது தமிழ் தெரியாது. தமிழ் ஆசிரியருக்கும் சிங்களம் தெரியாது, இவ்வித நிலைமையில் எவ்விதமாக தத்தம் கடமைகளைச் செய்கிறார்களோ தெரியாது. அத்துடன் தமிழ் வகுப்பு மாணவர் உட்காரும் ஆசனங்கள் ஊஞ்சல் மாதிரி ஆடிக்கொண்டிருக்கும் அதுவும் மாணவர்களுக்குப் போதியதாயில்லை. கட்டிடமோ, மழை காற்று ஆகியவற்றின் ஆதிக்கத்திலிருக்கிறது. இப்பாடசாலையில் தமிழர் சிங்களவர் வேற்றுமை தலைகாட்டி வருகிறதைக் காண வருந்துகிறோம். நிர்வாகி இதைக் கவனிப்பாரா?

"பாடசாலை அபிமானி"
மாத்தளை

சுதந்திரன்
SUTANTIRAN

194ஏ, தட்டாதெரு போன்: 3411

1952 செப்டம்பர் மீ 14 உ

# சேர் ஜோனின் மறுதலிப்பு

"தோட்டப் பாதையிலே" என்னும் "1952-ம் வருடத்திய பிரதமர் பதவிப் போட்டி" ஒரு அரசியல் கொந்தளிப்புக்கு அடிகோலியது.

ஆனல் சேர் ஜோன் கொத்தலாவல அமெரிக்காவில் இருந்து ஓடோடியும் வந்து அந்தப் பிரசுரத்திற்குத் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென்று பிரதமர் டட்லியிடம் இரண்டு வார்த்தை கூறியதும் கொந்தளிப்பு அடங்கியது! மந்திரி சபையில் நெருக்கடியும் தீர்ந்தது! சேர் ஜோனின் மந்திரி பதவியும் பாதுகாக்கப்பட்டது!

சேர் ஜோன் தமக்கும் அந்தப் பிரசுரத்திற்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்று கூறியது முற்றும் உண்மை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனல் அவர் அந்த உண்மையை வெளியிட்டவிதம் பொது மக்களிடையே பலவித சர்ச்சைகளுக்கு இடமளித்திருக்கிறது.

சேர் ஜோன் இலங்கையில் இருந்து மேல் நாடுகளுக்கு உல்லாசப் பிரயாணம் செல்லவில்லை. இலங்கா அதிகாரிகள் சிலரையும் அழைத்துக்கொண்டு அரசாங்கச் செலவில் உத்தியோக முறையிலேயே பிரயாணம் செய்தார்.

அவர் பிரயாணத்தில் ஒரு முக்கியமான கடமையும் பிணைக்கப்பட்டிருந்தது. அதாவது இலங்கையின் சார்பில் அவர் ஒட்டாவாவில் நடைபெறும் பாராளுமன்ற மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தார் எனவே மேற்படி பிரயாணத்தில் அவர் தம் இஷ்டப்படி எதுவும் செய்யாமல் தாம் மேற்கொண்ட பொறுப்பை முற்ற முடிவுற நிறைவேற்றவேண்டியது அவரது கடமையாகும்.

அரசியல் நெருக்கடியை உண்டுபண்ணிய பிரசுரத்தைப்பற்றிய செய்தியை இலங்கைப் பத்திரிகையொன்றின் நிருபர் லண்டனில் வைத்தே சேர் ஜோனிடம் கடந்த மாதம் 25-ந் திகதி குறிப்பிட்டு அபிப்பிராயம் கேட்டிருக்கிறார்.

அப்போதே சேர் ஜோன் இந்தவிதமான பிரசுரம் எதற்கும் தமக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கலாம் இன்றேல் "அப் பிரசுரத்தைப் பார்த்த பின்பே அபிப்பிராயம் சொல்வேன்" என்றாவது சொல்லியிருக்கலாம். இரண்டும் சொல்லாமல் 'அந்தப் பிரசுரத்தையோ அன்றி அதன் பகுதியையோ எந்தப் பத்திரிகையாவது பிரசுரிக்க நேர்ந்தால் அதன் பலாபலன்களை அந்தப் பத்திரிகையே ஏற்றுக்கொள்ள நேரிடும்" என்று பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை விடுக்க எத்தனித்திருக்கிறார்

அதுதான் போகட்டும். நியூயோர்க்கில் வைத்துப் பிரதமரின் கடல் தந்தி கிடைத்ததும் தமக்கும் அந்தப் பிரசுரத்திற்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்பதை ஒரு கடல் தந்திமூலமோ, டிரங் டெலிபோன்மூலமோ, ரேடியோ செய்திமூலமோ, அன்றி விமானத் தபால்மூலமோ பிரதமருக்கு அறிவித்துவிட்டு தாம் மேற்கொண்ட தேசத்தின் கடமையை நிறைவேற்றியிருக்கலாம்.

இரண்டு சந்தர்ப்பத்தையும் மேற்கண்ட ஏதாவது ஒரு வழியில் பயன்படுத்திக்கொள்ளாமல் இவர் பரிதவித்துக்கொண்டு இராப்பகலாகப் பறந்தடித்துக்கொண்டு இங்கு வந்து குதிக்கக் காரணம் என்ன?

இங்கு வந்து இவர் பிரதமருடன் நடத்திய பேச்சு சில நிமிஷங்களில் முடிந்துவிட்டதே. இந்தப் பேச்சை டிரங் டெலிபோன்மூலமோ அன்றி கடிதமூலமோ நடத்தியிருக்க முடியாதா? நன்றாக முடியும். ஆனல அந்தப் பேச்சு வேறு யாரும் அறியக் கூடாத, எழுத்தில் எழுதக்கூடாத பேரப் பேச்சாய் இருந்தால் அதை நேர்முகமாகத்தானே வெளியிட வேண்டும்? — இப்படியெல்லாம் பொது மக்கள் ஆராய்வதற்கு சேர் ஜோனின் நடவடிக்கை இடமளித்துவிட்டதே என்றுதான் நாம கவலைப்படுகிறோம்.

நடைபெற்றுமுடிந்த இந்த அகசியக்கூத்துசம்பந்தமாக நாம் இரண்டு விஷயங்களை வற்புறுத்தவேண்டியிருக்கிறது. ஒட்டாவா மகாநாட்டில இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொள்வதற்கு பொதுமக்களின் வரிப் பணத்தில பிரயாணம செய்த இவர் "என் சொந்த இஷ்டத்திற்கேற்ப நான் திரும்பிப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு இடைவழியில் திரும்பியதானது அவருடைய பொறுப்புணர்ச்சியற்ற தன்மை[illegible] [illegible]ரிகா போய்வி[illegible] [illegible] கொடுக்காதவாறு எதிர்கட்சியின[illegible] [illegible]

மற்றது: பிரஸ்தாப பிரசுரத்தை சேர் ஜோன் எழுதவில்லை, வெளியிடவில்லையென்று சொன்னதும் விஷயம் அவ்வளவோடு முடிந்துவிடவில்லை. அவதூறன இந்தப் பிரசுரத்தை யார் எழுதினர்கள்? யார் வெளியிட்டார்கள் என்பதை அரசாங்கம அவசியம் கண்டுபிடித்து அந்த மூலகர்த்தாவை உரிய தண்[illegible]னைக்குள்ளாக்க வேண்டும.


[illegible]இல்லையேல இப்படியான அவதூற்றுப் பிர[illegible]கள் புற்றீசல்போல் மேலும் மேலும் கிளம்பி [illegible] நாசப்படுத்துவதற்கு அரசாங்கத்தின[illegible]ம் கொடுத்தவர்கள ஆவார்கள் என்று வற்பு[illegible]கிறோம.

# மந்திரிகள் மக்களின் ஊழியர்கள்

டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன்

மந்திரிகள் என்று சொல்லப்படுவோர் மக்களின் ஊழியர்கள். உண்மை ஜனநாயகம் நிலவும் நாட்டில் அதிகாரத்தை உடையவர்கள் பொது ஜனங்களே அன்றி மந்திரிகள் அல்ல நாம் உண்மையில் சுதந்திரம் பெற்றவர்களாய் இருந்தால், சுய ஆட்சியோடு நாம இணைக்கப்பட்டவர்களாயிருந்தால், ஜனநாயகத்தின உரிமைகளை நாம் பெற்றவர்களாய் இருந்தால் பொதுமக்களாகிய நாம் தான் இந்த நாட்டின் எஜமானர்களாய் விளங்கவேண்டும். நாம் நியமிக்கும் மந்திரிகள் நமது ஏவலாளராய் இருக்கவேண்டும்

இந்த உண்மையை யாழ்ப்பாணத்தின் நகரபிதாவான மேயரும் அவ



டாக்டர் ஈ எம். வி. நாகநாதன்

ரைப்போன்ற மனோபாவமுள்ள மற்றவர்களும் என்றுதான் உணர்ந்துகொள்ளப் போகிறார்களோ?

கடந்த வாரம் சேர் ஒலிவர் குணதிலகாவின் யாழ்ப்பாண விஜயத்தையொட்டி அங்கு நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளைக் கவனித்தபோது மேற்கண்டவாறுதான் எண்ணத்தோன்றிற்று.

சேர் ஒலிவரைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்திலுள்ள இரு மேற்றிராணியார்களும், மாநகர சபை அங்கத்தவர்களும், பிரபலமான டாக்டர்களும், சட்ட வாதிகளும், வர்த்தகர்களும் மேற்படி விருந்துக்கு சமூகம் கொடுத்திருந்தார்கள் சமய சந்தர்ப்பத்திற்கேற்ற அலங்கார பூஜிதராய் சேர் ஒலிவர் காட்சியளித்தார். அந்த விருந்தில் சற்றும் எதிர்பாராதபடி என்னைக் கண்டதனால் ஏற்பட்ட ஆச்சரியத்தை மூடி மறைக்கவோ என்னவோ அப்படியே என்னைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.

விருந்து சுவையான நல் விருந்தாய் இருந்தது. வாடி வீட்டின் நிர்வாகஸ்தரான திரு மரியாம்பிள்ளைக்கு அந்த விருந்து ஒரு புகழைத் தேடிக் கொடுத்தது என்று கூடச் சொல்லலாம். வயிறு புடைக்க உண்டேன். ஆனல் எனது அருமை விருந்தாளியான மேயரின் பிரசங்கத்தைதுளிகூட என்னல் உட்கொள்ள முடியவில்லை. விருந்தாளியான மேயரின் மன்னிப்போடு இதை நான் வெளியிட வேண்டியிருக்கிறது.

மேயர் பேசினர். அவர் பேச்சில் பிரதம அதிதியான சேர் ஒலிவர் குணதிலகாவை வாழ்த்தினரா அன்றி அவரிடம் வரங் கேட்டாரா என்று சரியாகச் சொல்லமுடியவில்லை.

நான் பிரமித்துப்போகும்படியாக அவர் பின் வருமாறு பேசினர். "சேர் ஒலிவர் அவர்களே, நாங்கள் தங்களை வரவேற்கிறோம். தாங்கள் அதிகாரத்தில் உள்ள ஒருவராய் இருப்பதால் தங்களை வரவேற்கிறோம் சேர் ஒலிவர் அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதால் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஏனென்றால் நாங்கள் கேட்கும் எத்தனையோ விஷயங்களை அவரால் நமக்கு கொடுக்கமுடியும்!"

இந்தப் பேச்சைக் கேட்டதும் சேர் ஒலிவர் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டார். சர்வ வல்லமை பொருந்திய சீஸரின் பிரதிநிதியாக சர்வ அதிகாரங்களுமுடைய ஒரு ஸ்தானிகர் பிரஜைகளிடம் விஜயம் செய்ததுபோன்ற மனோபாவத்துடன் பின்வருமாறு பேசலானர். 'மேயர் அவர்களே, உங்கள் மக்கள் சார்பில் நீங்கள் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளை நான் மிகவும் சிரத்தையோடும் அனுதாபத்தோடும் கவனிப்பேன் மந்திரி என்ற முறையில் என் அதிகாரத்தின் கீழ்ப்பட்ட விஷயங்களில் மட்டுமல்ல, இதர விஷயங்களையும் நான் கவனித்துக் கொள்ளமுடியும். உங்கள் தேவைகளுக்கு அரசாங்கம் பரிபூரண அனுதாபம் காட்டுமென்று நான் உறுதி கூறுகிறேன்'

இன்று நமது நாட்டிலே நடைபெறும் ஆட்சி மக்

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூலியைக் குறைத்தால் நேரடி நடவடிக்கை?

## மந்திரிகள் மக்களின்......

[8-ம் பக்கத் தொடர்ச்சி] களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் ஆட்சியென்றுல் இங்கு மந்திரிகள் மக்களின் ஊழியர்களாய் இருக்கவேண்டும். மன்னர்கள் ஆதிக்கத்திலிருந்த காலத்தில் மந்திரிகள் மன்னர்களின் ஊழியர்களாயிருந்தார்கள் இன்றைய ஜனநாயக யுகத்தில் மக்கள் ஆதிக்கத்தில் இருக்கிறார்கள், மந்திரிகள் அவர்களின் ஊழியர்கள் மக்களின் ஊழியர்களான மந்திரிகள் தமக்குரிய கடமையைச் செய்யும்போது நாட்டின் பல பாகத்திற்கும் விஜயம் செய்து தங்கள் எஜமானர்களான மக்களின் எண்ணங்களையும் தேவைகளையும் அறிந்து கொள்வதோடு தாங்கள் செய்த வேலைகளின் விவரத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். மக்களின் ஊழியர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டியது சரியானதுதான். ஆனால் ஆண்டான் அடிமை மனோபாவத்தோடு அதைச் செய்வது சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் மதிப்பு வைத்திருப்பவர்களுடைய மனத்திலே ஆத்திரத்தை உண்டாக்காமல் போகாது.

இரண்டு சம்பவங்கள் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். இரண்டாவது சம்பவத்திற்குரிய காட்சி இப்போது ஆரம்பிக்கிறது. மாலையின் இருள் சூழ்ந்து கொண்டு வருகிறது. கொழும்பு மெயில்வண்டி அந்த மங்கல் போதிலே சாவகச்சேரி பிளாட்பாரத்தை அடைகிறது. சற்று தூரத்தில் ஒரு பூப்பந்தல் ஆடி அசைந்து வருவதை நாம் காண்கிறோம். சில கிற்ஸன் விளக்குகள் பிரகாசிக்கின்றன. நாதஸ்வரத்தோடு கூடிய மேளங்கள் ஒலிக்கின்றன. சீன வெடிகள் காதைச் செவிடுபடச் செய்கின்றன. ஊர்வலம் பிளாட்பாரத்தை அடைகிறது. அங்கு நாம் காணும் காட்சியென்ன? செயலற்று பேச்சற்று நிற்கிறோம்!

மகா வல்லமை பொருந்திய சேஸரின் சர்வ அதிகாரங்களும் நிறைந்த பிரதிநிதி ஒருவித தேசியப் பெருமிதத்துடன், திருப்தியும நிறைவும் பிரதிபலிக்கும் முகத்துடன், வெற்றி நடை போட்டு வந்து கொண்டிருக்கிறார். அவருடைய நிமிர்ந்த தலைக்கு மேலே ஒரு பூம்பந்தல் ... துகொண்டிருக்கிறது ... ப்பந்தலை கேவலம் ஆபிரிக்க அடிமைகள்போல் சில ... ன்மான மற்ற தமிழர்கள் ... சுமந்து கொண்டு வருகிறார்கள். சுதேசிகளான பிரஜைகளைப்போல் அவர்கள் பின்னே ஒரு கூட்டம். அக்கூட்டத்தைத் தலைபாரியாக நின்று சாவகச்சேரிப் பிரதிநிதி வழிநடத்தி வருகிறார்.

இருள் சூழ்ந்த ஆபிரிக்காக கண்டத்திலே, ஒரு குக்கிராமத்திலே, அங்குள்ள காட்டு மிராண்டிகள் ஒரு வெள்ளைக்கார அதிகாரிக்கு இப்படி அடிபணிந்து மரியாதை செய்வதை ஒருவர் கற்பனை செய்ய முடியுமேயன்றி இலங்கையில் இத்தகைய காட்சி நடப்பதை எண்ணிப் பார்க்கவே உடல் கூசுகிறது. காட்டுமிராண்டிகள் வாழ்ந்த ஆபிரிக்காக் கண்டத்திலகூட சுதேசிகள் தன்மான உணர்ச்சி பெற்று சுயகௌரவத்தை நிலை நாட்ட இன்று கிளர்ச்சி செய்யும்போது மானம் போனால் உயிர்வாழாப் பண்பு கொண்ட தமிழன் வாழும் சாவகச்சேரியிலா இந்த கேவல நிலை?

இந்தக் காட்சி முழுவதுமே அசம்பாவிதமாக விருந்தது. ஒலிவர் மாமாவின் வீர நடையும் கம்பீரத் தோற்றத்தையும் பார்க்க எனக்கு அடக்க முடியாத சிரிப்புத்தான் ஏற்பட்டது, ஆனாலும் மறுகணம் என்னை வெட்கம் மேற்கொண்டது. நான் சிரிப்பதானால் எதைப் பார்த்துச் சிரிப்பது? எங்கள் மக்களுடைய அறியாமையையும் அவமானமான செயலையும் பார்த்து நாமே சிரிப்பதா?

பிளாட்பாரத்திலும் ரயில் வண்டியுள்ளும் இருந்த மக்களிடம் கேவலமான, உதைத்த காலை முத்தமிடும் இந்த அரசியல் சாகஸத்தைப்பற்றி எடுத்துரைக்காமல் ஒரு நிமிஷம் கூட என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஒரு பிரபல புரக்டர்தான் என் துருவருக்க நாயின் தாக்குதலுக்கு முதல் இலக்கானார். நான் பேசும்போது அங்கு கூடிவிட்ட இளைஞர் அந்த புரக்டரின் படுதோல்வியைக் கண்டு எள்ளி நகையாடினர். அங்கு காணப்பட்ட கூட்டத்துள் பிரவேசித்து என் ... ட்டத் ... 'டப் லட்' தவறு காரணமாகயில் வண்டி அங்கு சுமார் ... ரு

மணித்தியாலம் தாமதிக்க நேரிட்டது. இதற்கிடையில் அங்கு கூடியிருந்த மக்கள், விசேஷமாக இளைஞர்கள் ஆடம்பர அரசியல் பற்றி நான் கூறிய விளக்கங்களைப் புரிந்து கொண்டார்கள்.

ரயில் புறப்பட்டது. என்னுடைய இரச்சலுடன் வாலிபர்களின் கோஷங்களும் வானைப் பிளந்தன. அந்த பிளாட்பாரம் நெடுகிலும் ஒலித்த ஒரே கோஷம் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. அந்தக் கோஷம் "தமிழ் அரசு வாழ்க, தமிழ் அரசு வாழ்க" என்பதுதான்.

## காங்கிரஸ் தலைவர்கள் மகாநாட்டில் திரு ராஜலிங்கம்

தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைப்பதற்கு தோட்டமுதலாளிகள் செய்யும் முயற்சியைக் கண்டிப்பதற்காக இ. இ. காங்கிரஸ் தோட்டக் கமிட்டிகளினதும், ஜில்லாக் கமிட்டிகளினதும் தலைவர்களின் மகாநாடொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நாவலப்பிட்டியில் நடைபெற்றது. திரு கே. ராஜலிங்கம் தலைமை வகித்தார். 1500க்கு மேற்பட்ட தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

கூலிவெட்டைக் கண்டித்தும், சம்பளக் குறைப்புத் திட்டத்தை தோட்ட முதலாளிமார் சம்மேளனம் வாபஸ் வாங்கவேண்டுமென்றும், அரசாங்கம் இதில் தலையிட வேண்டுமென்றும் கோரியும் தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இந்த வேண்டுகோளுக்கு முதலாளிகள் செவிசாய்க்காவிட்டால், வேறுவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டி வருமென்று திரு ராஜலிங்கம் எச்சரித்தார்.

திருவாளர்கள் வி. வி. வேலுப்பிள்ளை, எஸ். தொண்டமான், ஏ. அஸீஸ், ராமஸ்வாமி, பெர்னாண்டஸ், மாரிமுத்து முதலியோரும் பேசினார்கள்.

சம்பளவெட்டை ஆட்சேபித்து நேற்று முன்தினம கொழும்பு நகரமண்டபத்தில் ஐந்து கண்டனக் கூட்டம நடைபெற்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிற்சங்க சம்மேளனம், தொழிலாளர் சம்மேளனம ஆகிய தொழிலாளர் மத்திய ஸ்தாபனங்களின் சார்பாக இக்கூட்டம நடைபெற்றது.


## வேல் தைலம்

இதனால் குணமாகும் வியாதிகள்:- ஜலதோஷம், மூக்கடைப்பு தலைவலி, தலைப்பாரம், ஒருதலைக்குத்து பிடரிக்கனம், கைகால் உளைச்சல், முதுகுவலி, வயிற்று வலி, விஷக்கடி, தேள்கடி, பூரான்கடி, எலிக்கடி, ஜன்னி 13 வாதம் 80, வாய்வுகுத்து, வாய்வு பிடிப்புகள், விதை வாய்வு, நரம்பு வலி, பல்வலி, பல்அரணைகள், இழுப்பு சுக்குவான், இருமல், காதுகுத்து, காதுவலி, சுளுக்கு வீக்கம், ரத்தக்கட்டு, வெட்டுக்காயம், புண் சொறி சிரங்கு கட்டிகள் புறப்பாடுகள் முதலிய சகல வலிகளுக்கும் வியாதிகளுக்கும் அந்தந்த இடங்களில் வேல் தைலத்தை நன்றாய்த் தேய்த்து வர ஆச்சரியமான குணம் கொடுக்கும் இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகாசஞ்சீவி. ஒவ்வொரு புட்டியிலும் உபயோக விபரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

**புட்டி 1 ரூ 1-25 டஜன் 1 ரூ 1 -00**

வி. பி. பி. தபால் செலவு வேறு

## லக்சால்

இது நாள்பட்ட சொறி சிரங்கு முகப்பரு தமைச்சல் கக்கூஸ்பற்று படை தேமல் வண்டுகடி தண்ணீர்கடி பித்த வெடிப்பு ரணங்கள் புண்கள் காயம் வேனல்கட்டி கரப்பன் தழுவணி அக்கி தீச்சுட்ட டண்கள் முதலிய சகல சர்ம வியாதிகளையும் குணமாக்கும் இது தோலிலுள்ள விஷக் கிருமிகளை சில நிமிஷங்களில் அழித்து பூரணசுகத்தைக்கொடுக்கு சர்மத்திற்கு பளபளப்பை உண்டாக்குகிறது துணிகளில் கறைபிடிக்காது.

**புட்டி 1 சதம் 75 டஜன் 1 ரூ. 7-00**

வி. பி. பி. தபால் செலவு வேறு

## கோபால் பல் பொடி

பல்களுக்கு வெண்மைதந்து பிரகாசிக்கச் செய்யும் பல்வலி பல்அரணை பல்கூச்சம் ஈறுகளில் இரத்தம் வருதல் முதலியவைகளை நீக்கி பல்களுக்கு தீர்க்காயுள் தரும் வாய்க்கு ருசியும் முகத்துக்கு அழகையும் உண்டாக்குகிறது, 100 பாக்கெட்டுகள் விலை ரூ 7-50 வி பி பி. தபால் செலவு வேறு. இம்மருந்துகள் எல்லா இடங்களிலும் விற்கப்படுகிறது. உங்களுக்கு சமீபத்தில் உள்ள கடைகளில் கேட்டு வாங்குங்கள் அல்லது எமது இலங்கை சோல் ஏஜண்டுக்கு எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

**தயாரிப்பவர்கள்:**

**ஏ. எம். பி. எஸ். ஜெயம் அன் கோ.**

வேல் கெமிக்கல் ஒர்க்ஸ். 250 கீழமாசிவீதி, மதுரை

இலங்கை சோல் ஏஜண்ட்:

**எம் ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார்&கோ,**

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

ஹெட் ஆபீஸ்:-


193 காலிரோட் கொள்ளுப்பிட்டி கொழும்பு-3.

TELE Grams: Jayajeevi, Phone: 6019



## மர அரிவுக்கு வேண்டிய சக்கர வாள்கள்

ஏராளமானவை



வந்திருக்கின்றன

கீழ்க்காணும் சைஸுகள் கைவசம் இருக்கின்றன உங்கள் தேவைக்கு ஆடர் செய்யுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 6'1"19 | கேஜ் | 18"1½"14 | கேஜ் |
| 8"¼ 18 | " | 20"1½ 14 | " |
| 10 1 17 | " | 24"1½"12 | " |
| 12' 1' 16 | " | 30 1½ 12 | " |
| 14 1 16 | " | 36'1½'11 | " |
| 18 1 14 | " | 46' 2' 9 | " |

ஜேமன் மேக சக்கர வாள்கள்......

| | |
|---|---|
| 42'2 10 | கேஜ் |
| 48 2" 9 | " |
| 54' 2" | |
| 60 2" 7 | |

விலைகளும் மற்றும் விபரங்களும் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**சாமுவேல், சன்ஸ் அன் கம்பெனி லிமிட்டெட்,**

371, பழையசோனக தெரு, கொழும்பு.

தபாற் பெட்டி நீர் 46, டெலிபோன்: 2841


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வாழத் தெரிந்தவள்

"நாவேந்தன்"

"சீலா,

அவளுக்கென்ன அதிர்ஷ்டசாலி. பணத்தில் கிடந்து புரளுகிறாள். வேண்டியதைச் செய்ய எத்தனை வேலைக்காரர்கள் காத்துக் கிடக்கிறார்கள் நடையுடை. பாவனை எல்லாவற்றிலுமே அவள் இப்பொழுது புதியவளாகிவிட்டாள் அவள் ஏன் நம்மைக் கவனிக்கப் போகிறாள்"

இன்று என்னைப் பார்த்து இப்படிப் பொருமைப்படுகிற சமுகம்தான் அன்று என்னை ஒழுக்கங் கெட்டவளாக—ஊதாரியாக—ஒன்றுக்கும் உதவாதவளாக ஆக்கியது. ஆனால் இன்று............? அது தன் போக்கை மாற்றிக்கொண்டதா, இல்லவேயில்லை!

ஆனால்............! அன்று என் முன்னமே என்னைப் பார்த்துத் திட்டிய சமூகம் இன்று மறைமுகமாக திரை மறைவிலே திட்டிக்கொண்டிருக்கிறது எதனால்..............?

நான் பணக்காரி யாகிவிட்டேன் என்ற ஒரேயொரு காரணத்தினால். ஆம் உண்மை முற்றிலும் உண்மை. நான் பணக்காரியாகினது ஒழுக்கங் கெட்டுத்தான். ஆனால் நான் ஒழுக்கமுள்ளவளாக—உண்மையுள்ளவளாக இருந்தபோது இந்தச் சமுகம் மாத்திரம் சும்மா விருந்ததா?

'சிறுக்கி, மிதித்த அடிக்குள்ளே எட்டுக் குட்டிக் கரணம்போட்டு எகிறுகிறாளே" என்று ஏளனஞ் செய்தது.

இப்பொழுதுமட்டும் ஏனோ தன் வாயை அடக்கிக்கொள்ளத் தெண்டிக்கிறது. ஆனால் நான் மட்டும் விடமாட்டேன். இந்த மானங்கெட்ட சமுகத்தின் வண்டவாளங்களைச் சந்தி சிரிக்கவைத்த பிறகுதான் எனக்குச் சாந்தி கிடைக்கும்.

ஃ

ஏழ்மையின் சிகரமாக விளங்கிய ஒரு குடும்பத்திலேதான் நான் பிறந்தேன். அதுவும் ஏக புத்திரியாக. அன்றன்றுட உணவிற்குச் சரீர உழைப்பை நம்பி வாழ்ந்துவந்த என் குடும்பம் திடீரென்று என் அப்பா மரணமடைந்ததினால் திசை கெட்டுத் திணறியது. வாழ்க்கையிலே மகிழ்ச்சி இன்னதென்பதையே அறியாத என் தாயார் மேலும் துன்பத்தையே வரித்துக்கொண்டாள். அங்கு மிங்குமாகக் கூலி வேலை செய்து என்னை வளர்த்தாள் பாடசாலை வாழ்வு ஆரம்பித்தது. கூலி வேலை செய்ததன் பயன் நான ஓரளவுக்கு படிப்பு—எழுதத் தெரிந்தவளாக மாறினேன். இயற்கையும் என் மீது தனது பூரண கடாட்சத்தைப்பிரயோகித்தது. நான் பருவப் பெண்ணாக மாறிய போது எழில் என்னை நிறைத்திருந்தது. அது போலவே என் தாயின் நெஞ்சையும் துயரம் நிறைத்திருந்தது.

அவளுக்கெல்லாம் ஒரே ஒரு கவலைதான் எங்கேயோ நல்ல ஒரு இடமாகப் பார்த்து என்னைக் கட்டிக் கொடுத்துவிடவேண்டுமென்று. பாவம்! அவளுக்குத் தெரியவில்லை, இந்தக் காலத்தில் ஒரு பருவப் பெண்ணுக்கு அழகு மட்டும்போதாது, ஆடை ஆபரணங்கள், பார்த்தவர் பொருமைப்படத் தக்க அளவு பணம் இருக்க வேண்டுமென்று. அப்படியிருந்தாற்றான் அவள் எண்ணம்—பருவப் பெண் ஒரு வரனைச் கணவனாக அடைய முடியுமென்பது நிறைவேறுமென்று.

எத்தனையோ இடங்கள் ஓடிப் பார்த்துவிட்டாள். ஒருவராவது எனக்கு மாப்பிள்ளையாக வர மனது ஒப்பவில்லை. 'அ'வென்று சொல்லத் தெரியாதவர்களே ஆயிரக் கணக்கில் வரதட்சணை கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த நேரத்தில் என் அதிர்ஷ்டம், ஒரு வாலிபன் அதுவும் மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளமாக உழைப்பவன் எனக்கு மணாளனாக வர மனமிசைந்தான் அம். நான் அவனைக் காதலித்தேன். அவன் என்னைக் காதலித்தான் ஆனால் இந்தச் சமுகம் இடையே குறுக்கிட்டது.

அவன் ஒரு ஆசிரியன். குழந்தை மனது படைத்தவன் ஆனால் இந்தக் கண்கெட்ட குருட்டுச் சமுகத்தின் முன்னே அவன் 'தாழ்ந்த சாதிக்காரன். 'ஒடுக்கப்பட்ட' குலத்திலுதித்தவன். "அவனை, நீ மணஞ்செய்துகொள்வதா? நமது குலப்பெருமை என்னாவது? மானங் கெட்டவளே என்ன முடிவு செய்துவிட்டாய்?" என்று ஒரு ஆசிரமம் எனது தாயின் உருவில் ஆவேசித்து நின்று அலறியது நான் பெட்டிப் பாம்பாகிவிட்டேன். கண்ணகி பிறந்த தமிழ் நாட்டிலே பெண்கள் எடுத்த சொல்லுக்கு எதிர்ச் சொல்லு சொன்னால் அது பச்சை விபச்சாரமாகிவிடுமே! நான் வாயே திறக்கவில்லை.

அதற்குள் இந்தச் சமுகம்......"காதலாம் காதல், கண்ட கண்ட சாதிக்காரனைகளோடே தனது எண்ணப்படி குதிக்கிறாளாம் சிறுக்கி" என்று ஏசமட்டும் தவறவில்லை ஒரு ஏழைப் பெண்ணுக்குத் தக்க பருவத்தில் தாலி கட்ட ஒருவனைத் தேடிக் கொடுக்க முடியாத சமுகம் வெறும் வாயை மட்டும் ஏனோ சப்புவதில் சளைக்கிறதில்லை!

ஒரு மாதகாலம் மெதுவாக நத்தைபோல ஊர்ந்து தீர்ந்தது அதற்குள் என் வாழ்விலும் மாறுதல் உண்டாக ஆரம்பித்தது நான் மனந் துணிந்துவிட்டேன். இந்த வஞ்சக சமுகத்தின் வாயை அடக்கச் சபதம் எடுத்துவிட்டேன். அதில் தோல்வி காணாமலிருக்க நான் எதுவுஞ் செய்யத் தயாராகிவிட்டேன். அதற்கும் அடையாளமாக ஐம்பது வயது சென்ற [illegible] பர்' ஒருவர் எனக்குத் [illegible] கட்டித் தன் மனைவியாக்கிக்கொண்டார் [illegible] இருந்த ஒரேயொரு வேலையும் மாற்றுப் பெற்ற மகிழ்ச்சியில் என் தாயும் நிம்மதியாகக் கண்ணை மூடிவிட்டாள். ஆனால் என்னால் மட்டும் நிம்மதியாக வாழமுடியவில்லை.

............?

ஃ

பாலியத்தின் உணர்ச்சிகள் முழு நிலாச் சாலத்தையும், முல்லையின் நறுமணத்தையும், மல்லிகையின் வாசனையையும்காணும் போது, அனுபவிக்கும் போது என் உள்ளத்தைக் கறையானாக அரித்தன கடலின் பயங்கர கொந்தளிப்பைப்போலஎன்னுள் இன்ப உணர்ச்சிகள் அலையடித்தன. வெறும் வயிற்றுப் பசியைமட்டும் அவித்துக் கொள்வதால் மாத்திரம் மனித சாதி எப்பொழுதாவது இன்பங்கொள்ள முடிந்ததா? நானும் ஒரு சாதாரணப் பெண்தானே. என் இளமைக் கனவுகள் ஆசை உணர்ச்சிகள் அத்தனையும் வியர்த்தமாவதை நான் விரும்புவேனா?

இந்த நிலையில் என் வாழ்வை மாற்றியமைக்கச் சந்தர்ப்பம் நேரிட்டது டாக்டர் சங்கரன் எங்கள் வீட்டினொரு பகுதியைத் தமது உத்தியோக வாசஸ்தலமாக வாடகைக்கெடுத்துக் கொண்டபோது என் உள்ளமும் வாடகை வாங்காமலே அவரைச் சேர்ந்துவிட்டது. இரண்டு வருடங்கள் என் வாழ்வில் இன்ப நாட்கள், எந்தக் கவர்ச்சியான ஒரு பெண்ணும் ஒரு வாலிபனைத் தன் அழகால்—மேனி மினுக்கால் வென்றுவிட முடியும் என்பதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டு. டாக்டர் சங்கரன் கலியாணமாகாத ஒரு வாலிபர்தான் ஆனால் அவர் உள்ளம் என் அரவணைப்பை—அன்பின் குழைவை ஏற்றுக்கொண்டது அது அவர் குற்றமல்ல என் குற்றம்—இல்லை இந்தச் சமுகத்தின் குற்றம். கட்டிளங் கன்னியொருவளை வீண் கௌரவத்திற்காகக் காலூன்றி நடக்க முடியாத கிழவனுக்குக் கட்டிக்கொடுக்க முனைந்த 'புத்திசாலி'களின் குற்றம். நான் டாக்டரின் அணைப்புக்கு அடிமையான பின் ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டேன் அவன் அசல் 'குட்டி டாக்டரே'தான் ஆனால்...
............!

ஒரு நாள் டாக்டர் சங்கரன் உத்தியோகம் மாற்றலாகி வேற்றூருக்கு வெளிப்பட்டார். இனி அவருடன் என்னால் உறவுகொண்டாடமுடியுமா? இந்தச் சமுகத்தின் கண்களுக்கு அவர் ஒரு பிரம்மச்சாரி! ஆனால் என் பார்வைக்கு மாத்திரம்..................?

கலங்கும் கண்களுடன் [illegible] விடைபெற்றுக்கொண்டு [illegible] விட்டார். என் மனம் ஒரு [illegible] தினைத்துக் கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு நாள்.............!

என் கிழக் கணவர்—பணக்காரர் திடீரென்று நோயாய்ப் படுத்தார். என்னால் முடிந்தவரையில்—உண்மை அன்புடன் சிகிச்சை செய்தேன். ஆனால் பலன் கிட்டவில்லை. காலன் அவர் உயிரைத் தன் 'கலனி'யில் குடியேற்றி விட்டான்

இப்பொழுது நான் விதவை. வயது மட்டும் இருபத்திரண்டு. "ஏ, குருட்டுச் சமுகமே நீயே பதில் சொல்லு. வாழும் வயதில் ஒரு வனிதையையே விதவையாக்கியது யார் குற்றம்? இனிமேல் அவள் வழி தவறி நடந்தால் அது யார் குற்றம்!"

என் மனம் புழுங்கியது என்னுடைய ஒரேயொரு குழந்தைக்காக உயிர் வாழ்ந்தேன் என் கிழக் கணவரின் சில ஆயிரக்கணக்கான ரொக்கமும் ஒரு பங்களாவும்தான் என் ஆஸ்தி ஆனால் ஒரு இளம் விதவை இனப வாழ்வை இளமையிலேயே பலி கொடுத்தவள் இந்த ஆஸ்தியை மட்டும் வைத்து நிம்மதியாக வாழமுடியுமா? அவளுக்கு மனித மனம் இல்லையா? ஆசை உணர்ச்சிகள் இல்லையா? அவள் எலும்பும் தசையும் சேர்ந்துண்டாகிய ஒரு பெண்தானே!

ஃ

மீண்டும் ஒரு சலனம்! என் பங்களாவுக்கு வலியவே வாடகை கேட்டு வந்தது அட்வகேட் அரங்கநாதன் இம்முறை பங்களாவின் ஒரு பகுதியை வாடகைக்குக் கேட்டார்: நான் கொடுத்துவிட்டேன் கேட்ட உடனேயே. அவரும் என் பங்களாவில் தம் 'ஆபீஸை' ஆக்கிக்கொண்டார். நான் என் பாட்டிலேயே ஒதுங்கி வாழமுயன்றேன் ஆனால் ஆசை உணர்ச்சி அடங்கி விட்டதா? வாலிபம் வற்றிப் போயிற்றா? இரண்டு நாள் கண்கள் சந்தித்தன மூன்றும் நாள் வாய் பேசிற்று நான்காம் நாள் நகமும் சதையும், மலரும் மணமும் ஒன்றையொன்று பற்றிக்கொண்டன. இது யார் தவறு?

முதல் டாக்டர், இரண்டாவது அட்வகேட். இனி......................?

நான் இப்பொழுது மீண்டும் ஒரு குழந்தைக்குத் தாய் விதவைப் பெண் தாயாவது விந்தை என்றல்லவா சொல்கிறீர்கள்! கேளுங்கள், இந்தச் சமுகத்தை அது பதில் சொல்லும்.

அரங்கநாதனின் அரை வாசிபுழைப்பு எனக்கு. அவர் இளம் மனைவியைப் பறி கொடுத்தவர்: பிள்ளை குட்டியில்லாதவர். மறுமணஞ்செய்ய மனமில்லாதவர். மதுவின் இரசனையை அனுபவித்து மகிழ்பவர்

(11-ம் பக்கம் பார்க்க)

---

## ஓடர் நிசை

—0—

மட்டக்களப்பு ஜில்லா நீதிமன்றத்தில்

—0—

மரண சாஸன வழக்கு நெ. 644.

மட்டக்களப்பைச் சேர்ந்த காலம் சென்ற சுப்ரமணியம் சிதம்பரம் பிள்ளையின் மரண சாஸன வழக்கில்......காலஞ்சென்றவர்.

திரிகோணமலை நீதிபதியின் பங்களாவிலிருக்கும் கேபிரியல் தாமஸ்—மனுதார்

1. திருமதி மஹேஸ்வரி சிதம்பரபிள்ளை, 51, ஆஸ்பத்திரி ரோட், மட்டக்களப்பு.
2. திருமதி மீனாம்பிகை தாமஸ், நீதிபதியின் பங்களா, திரிகோணமலை.
3. சிதம்பரபிள்ளை திருநாவுக்கரசு, 9, யெவ்வலே ரோட், பென்ஹாம், நிவ்காஸல்—ஒன்—டைன், இங்கிலாந்து.
4. திருமதி புவனேஸ்வரி நடராஜா, கூட்டுறவு இன்ஸ்பெக்டரின் பங்களா, குருணாக்கல் ரோட், புத்தளம்.
5. நடராஜகுரு பிரமதேவி மைனர்)
6. ஞானமுத்து நடராஜகுரு, டாக்டர், கொடமுனை, மட்டக்களப்பு.
7. பேரின்பராஜா பவளராணி (மைனர்)
8. எஸ். பேரின்பராஜா, உபொதிகாரி, வின்டலூர்.

—பிரதிவாதிகள்

1952, ஜுலை மீ 31 உ மட்டக்களப்பு ஜில்லா நீதிபதி திரு டி. ஜே. ஆர். குணவர்தன அவர்கள் முன்னிலையில் மனுதார் தரப்பு வக்கில் திரு கே. வி. எம். சுப்பிரமணியம் ஆஜராக இருக்கும்போது 1952, ஜுலை மீ, 15 உ எழுதிய சத்தியக் கடுதாசியும், 1952 ஜுலை மீ 31 உ மனுதார் எழுதிய மனுவும். மரண சாஸனத்தின் சாட்சிகளும் பதிங்க நொத்தாரிஸும் 1952, ஏப்ரல் மீ 9 உ எழுதிய சத்தியக் கடுதாசிகளும் வாசிக்கப்பட்டன.

பிரதிவாதிகளோ, அல்லது வேறு நபரோ அல்லது அக்கறையுள்ளவர்களோ 1952, செப்டம்பர் மீ 2ந் தேதி அல்லது அதற்கு முன்பு நீதிமன்றத்தார் ஏற்றுக் கொள்ளக் கூடிய போதிய தடங்கல் காரணம் காட்டத்தவறினால் 1952 ஏப்ரல் 9 ந் தேதி எழுதிய 1951-ம் இலக்கமுள்ள, இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் காலம் சென்ற சுப்ரமணியம் சிதம்பரம்பிள்ளையின் மரண சாஸனம் நிரூபிக்கப்பட்டுவிட்டதாகக் கட்டளையிடப்பட்டிருக்கிறது.

மேலும், 1952 செப்டம்பர் மீ 2ந்தேதி அல்லது அதற்கு முன்பு பிரதிவாதிகளோ, அல்லது வேறு நபரோ அல்லது அக்கறையுள்ளவர்களோ நீதிமன்றத்தார் ஏற்றுக்கொள்ளக் கூடிய போதிய தடங்கள் காரணம் காட்டத் தவறினால், மேற்சொல்லப்பட்ட மனுதார் மரண சாஸனத்தில் குறிப்பிடப்பட்ட நிர்வாகஸ்தர் என்ற ஹோதாவில் முறைப்படி மரண சாஸன நிருபணப் பத்திரம் வழங்கப்பட உரிமையுள்ளவராவார் என்பதாக கட்டளையிடப்படுகிறது.

மேலும், 1952, செப்டம்பர் மீ 2ந்தேதி அல்லது அதற்கு முன்பு பிரதிவாதிகளோ அல்லது வேறு நபரோ அல்லது அக்கறையுடையவர்களோ இந்த நீதிமன்றத்தார் ஏற்றுக்கொள்ளக் கூடிய போதிய தடங்கள் காரணம் காட்டத் தவறினால் மேற்சொல்லப்பட்ட 6-வது 8-வது பிரதிவாதிகள் முறையே மைனர்களான 5-வது 7-வது பிரதிவாதிகளுக்கு சட்ட ரீதியான பாதுகாவலர்களாக நியமிக்கப்படுகிறார்களென்று கட்டளையிடப்படுகிறது.

(ஒப்பம்)
டி. ஜே. ஆர். குணர்தன,
ஜில்லா நீதிபதி.
21 [illegible] 1952

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சிதம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் படத்தை யாரிடமோ கொடுத்து தனக்கு விரோதமாக சதிசெய்கிறுளோ என்று ஒரு கணம் எண்ணினன். எதற்கும் அவளை இங்குவரவழைத்து நேரிலே கேட்டறிந்து கொள்வதுதான் புத்தி என்றெண்ணியவனுக கடிதத்தை படித்து உறையில் போட்டு அதையும் புகைப்படத்தையும் இருந்த இடத்திலேயே வைத்து விடும்படி அழகுவிடம் கொடுத்தான்.

8-ந் திகதி திங்கட்கிழமையும் வந்தது சுந்தரம் காலையிலிருந்தே ஒரு குடைச்சிலையைச் வைத்துக்கொண்டு கத்தரிப்பும் தைப்பதுமாக இருந்தான். பகல் சாப்பாட்டுக்கு வந்த டகளஸ்துரை, சுந்தரம் ரூமில் இருப்பதைக் கண்டு "மிஸ்டர் சுந்தரம்" நான் இன்று பின்னேரம் கம்பளை வரைக்கும் போக வேண்டியிருக்கும். திரும்பி வந்துசேர பத்து மணியாகுதோ பன்னிரண்டு மணியாகுதோ தெரியாது' என்று கூறிவிட்டுச் சாப்பிடச் சென்றுர்.

சுந்தரம் மத்தியானச்சாப்பாட்டுக்குப் பின்னர் ரூமிலும் இல்லை, தோட்டத்திலும் காணப்படவில்லை. சரியாக மூன்று மணிக்கு துரை காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். ஆறுக்குப் பத்து நிமிஷமிருக்க 'டன்லப்' பாலத்தை அடைந்தார் அவர் எதிர்பார்த்தபடி அங்கு ஒரு பெண் காத்துக்கொண்டிருக்கவில்லை. ஒரு ஆண்கூட அங்கு காணப்படவில்லை ஒருவேளை இனித்தான் வருவாளோ? என்று தனக்குள் ஒரு கேள்வியைப் போட்டுக்கொண்டு அந்த நிர்மானுஷ்யமான பிரதேசத்தில் காரை நிறுத்தினுர்

'நீ யேண்டா அழையா விருந்தாளியா இங்கவந்தே! எங்கே அந்த சுந்தரம் பயல் என்று கூறிக்கொண்டு கப்புவா ஒரு புதருக்குள்ளிருந்து விரைந்துவந்து காரை அணுகினுன் துரை பயந்துவெலவெலத்துப்போனுர். பேச முடியாமல் தொண்டை கட்டிக்கொண்டது. காரை ஓட்டிக்கொண்டு தப்பிப்போய் விடலாமென் றெண்ணி டகளஸ் 'சுவிச்' சாவியில் கைபோட்டார்.

'அடே வெள்ளைப்பதரே! எடுகையை. அன்று உன்னை அந்தக் கங்காணி மவன் காப்பாற்றியதற்காக இன்று நீ அவனைக் காப்பாற்றுதற்காக வந்தாயா என்ன? அந்த இந்தியப்பயல் எங்களுக்கல்லவா பூச்சிகாட்டுறுன். அன்று உன்னுடைய பணம் பூராவும் நமகைக்கு வரும் தருவாயில் அவன் வந்து எங்கள் வாயில் மண்ணைப் போட்டானே. அவனுடைய எலும்பைத் தட்டி நொறுக்கிறவரைக்கும் என்ஞல் நிம்மதியாக தூங்க முடியுமா? எங்கேடே அவன்? 'என்று அதட்டிக்கொண்டே கன்னத்தில பளீரென்று ஒருஅடிவிட்டான் கப்புவா.

துரைக்கு அந்தமாலைவேளையல் கூடஆயிரம் நட்சத்திரங்கள தெரிந்தன. கப்புவா கொடுத்த அடி அவ்வ...

'அவன் வரல்லையே'! என்றுர் டகளஸ் குளறியடித்துக்கொண்டு.

'அவனுக்கல்லவாடா ரஞ்சிதம் எழுதியது போல நான் கடிதம்போட்டேன்! நீயேண்டா இங்குவந்தாய்?

"ரஞ்சிதம் வருவாள் அவனைச்சந்திக்க"

'அந்தப்பயல் உன்னிடம் சொன்ஞன், அவளை காரில் அழைத்துவரும்படி'

ஆமா...... இல்லை. நான் அந்தக்கடிதத்தை பார்த்தேன் அவள்வருவாளென்று எண்ணினேன்.

காமப்பிசாசே! அந்த இந்திய தமிழனுக்கு தவிரித்த வலையில் நீயாகவந்து மாட்டிக்கொண்டாய் இவ்வளவு தூரம் வந்திட்டு வெறுங்கையாக திருப்பிப்போகக் கூடாது. இந்தா! இதை வாங்கிக்கொள்' என்றுகூறி காப்புவா முஷ்டியை ஓங்கினுன்.

மறுநிமிஷம் முகமூடியணிந்த ஒரு உருவம் எங்கிருந்தோ திடீரென்று தோன்றி கப்புவாவின் உயர்த்திய கையை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றக்கையால் அவனுடைய மார்பில் ஓங்கிக் குத்தியதும் 'மக அம்மே!' என்று கூறிக் கொண்டு கப்புவா பின்னல் நகர்ந்தான்

இவ்வளவு நேரமும்புதர் மறைவிலிருந்த கடியாவும் கொட்டியாவும் ஓடி வந்து முகமூடியணிந்தமனிதனைத் தாகக எத்தனித்தனர் முகமூடியணிந்த மனிதன் அவர்களைக் கிட்ட நெருங்க விடாது காலால் எட்டி உதைத்தும் கையால் வீசியடித்தும் தாக்கினுன்.

இவ்வளவு நேரமும் கப்புவாவை எதிர்க்கத்தயங்கிக்கொண்டிருந்த டகளஸ் காரை விட்டு இறங்கி மூகமூடியணிந்த மனிதனுக்கு உதவியாக காடையர்களைத் தாக்கினுன் கொட்டியாவும் கடியாவும் துரையை எதிர்த்துத் தாக்கினுர்கள். கப்புவாவும் முகமூடியணிந்தவனும் ஒரு புறத்தில் சமர் புரிந்தனர். அரமணிநேரம் கைகலப்பு நடைபோட்ட பின்னர் கப்புவாவின் கைகளைத்து விட்டது. முகமூடி மனிதன் கொடுத்த அடிகளாலும் உதைகளாலும் அவனுடைய உடம்பு நொவெடுத்தது. நிற்க முடியாமல் தளளாடினுன். பிறகு ரோட்டோரத்தில் காலை நீட்டி உட்கார்ந்துகொண்டான் முகமூடியணிந்த மனிதன் துரையை எதிர்த்துத்தாக்கிய கொட்டியாவுக்கும் கடியாவுக்கும் மளமளவென்று நாலு கொடுத்தான. தலைவன் ஓய்ந்து உட்கார்ந்து விட்டதனுலும் முகமூடியணிந்தவனின அடியைத் தாங்கமாட்டாதமையினுலும கொட்டியாவும் கடியாவும் தாக்குதலை நிறுத்தி சரணுகதியடைந்தாகள். முகமூடியணிந்த மனிதன் ஒரே ஓட்டமாக ஓடி பற்றைகளுக்குள் சென்று மறைந்தான். டகளஸ் காரில் கிளம்பினுன்

மல்லிகைத் தோட்டத்தை அடைய மூன்று மைல் தூரம் இருக்கும்போது 'டமா'ரென்று ஒரு வெடிச்சப்தம் கேட்டது மறு நிமிஷம் துரையின்

காரின் பின் சக்கரமொன்று பஞ்சராயிற்று துரை கீழே இறங்கிப் பார்த்தார் டயர் தட்டையாக இருந்தது நேரம் இரவு பத்துமணியிருக்கும் அந்தவேளையில் அந்த இடத்தில அதுக்கு ஓட்டுப்போட முடியுமா? காரை அதிலேயேவிட்டு கால்நடையாகதோட்டத்துக்கு கிளம்பினுர். ஆபத்துசமயத்தில் தனக்கு அபயமளித்த அந்த முகமூடிமனிதன யார் என்று சிந்தித்தவாறு பங்களாவை அடைந்தார். அடுத்த நாள் காப்பகளாவுக்கு காண்டுவரப்பட்டது.

# கழகச் செய்திகள்

## அக்கரைப்பற்று ஜின்னு சமூகம்

அக்கரைப்பற்று ஜின்னு கழகத்தினரால் 1-9-52 ல் "ஈதல் அல்ஹா" தினம் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது தியாகத் தினத்தையொட்டி அக்கரைப்பற்று அரசினர் ஆண் பாடசாலையில் மௌலவி எ. எல் எம். இபுறுகீம் தலைமையில் ஒரு விசேஷக் கூட்டம் நிகழ்ந்தது ஜனுப் யு. எல் ஏ றஷீத் "கிரு அத்" ஓதினர்.

## காந்தி ஜயந்தி விழா கமிட்டி

அகில இலங்கை [illegible]லிபர் காங்கிரஸ் கமி[illegible]டிக் கூட்டம் கடந்த 23-8-[illegible]2 ல் குப்பனித் தெருவில் [illegible]திரு பி. என். குமாரசாமி [illegible]தலைமையில் நடைபெற்[illegible]து. வருடா வருடம் கொ[illegible]ண்டாடும் மகாத்மா காந்தி ஜயந்தி விழாவை இவ் வருடமும் அக்டோபர் மாதம் 2-ம் திகதி கொண்டாடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம்

கம்மல்துறை முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம் 30-8-52 ல் கம்பல்துறை அரசினர் தமிழ் பாடசாலை மண்டபத்தில் ஜனுப் யூ. எம் அப்துற்றஹ்மான் தலைமையில் நடைபெற்றது பலர் பேசிய பின்னர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்

## முன்னேற்றச் சங்கம்

சம்மாந்துறை மாணவர் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் கடந்த 30-8-52 ல் இவ்வூர் அரசினர் ஆண் பாடசாலையில் ஜனுப் ஹக்கீம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

## இளைஞர் மன்றம்

பெரிய நிலாவணை இளைஞர் மன்றத்தின் பொதுக் கூட்டமொன்று பெரிய நிலாவணை விளையாட்டு மைதானத்தில் கூடியது. சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இளைஞர் கழகம்

நலலூர் இளைஞர் கழகத்தின் இவ்வருட விழா கடந்த 25-8-52 ல் திரு இ. இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்றது. முதலாவதாக இவ்வருடத்தற்கு ஓர் நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டது.

## ஆதியர் மறுமலர்ச்சி சங்கம்

இராமநாதபுரம் மாவட்டம் திருவடானைத்தாலுகா ஆதியர் மறுமலர்ச்சி ஐக்கிய சங்கம் இலங்கை கிளையின் பொதுக் கூட்டமொன்று மருதானை பஞ்சிகாவத்தையில் கடந்த 1 9-52 ல் திரு கே பாலையா தலைமையில் நடைபெற்றது. மேற்படி மாவட்டத்தில் ஜாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை கண்டித்து பலர் பேசினுர்கள்.

## பெற்ருேர் ஆசிரியர் சங்கம்

பலாப்பத்துவெல அரசினர் தமிழ் சிரேஸ்ட பாடசாலை மண்டபத்தில் கடந்த 30 8-52 ல் திரு மா. முத்தமுத தலைமையில் பெற்ருேர்-ஆசிரியர் சங்க கூட்டம நடைபெற்றது புது வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அல்வாய் சன சமூக நிலையம்

அல்வாய் முத்துமாரியம்மன் சன சமூக நிலைய விளையாட்டுப் போட்டி கடந்த 29-8-52 ல் திரு எஸ். கே. இராமலிங்கம் தலைமையில் ஆரம்பித்த இப்போட்டியில் கம்பன், பாரதி, வள்ளுவர் ஆகிய மூன்று இல்லங்கள் கலந்துகொண்டன.

## வாழத்தெரிந்தவள்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வருமானம் மிக்கவர். அவர் இப்பொழுது எனக்குத் தாலி கட்டாத கணவன்... ............!

நான் இப்பொழுது வி... ப...சா...ரி ஆனல் மூன்று மோட்டார் வண்டிகள். ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள நகைகள் நான்கு பங்களாக்கள் இவற்றின் சொந்தக்காரி இத்தனையும் என் ஒழுக்கக் கேட்டால் வந்தவை. இவையையிட்டு உண்மையில் நான் மகிழ்ச்சியடையவில்லை.

ஆனல்......... மகிழ்ச்சியடைகிறேன் ஏன்?

இந்தக் குருட்டுச் சமூகத்தை வென்று விட்டேன் என்று. நான் ஒழுங்காக இருந்தபோது, ஒருவனை மணந்து கறபுள்ள பெண்ணுக வாழக் கருதியபோது தூற்றிய சமூகம் இப்பொழுது மட்டும் மெதுவாகத் தன் வாயை அடக்கிக் கொண்டிருக்கிறது ஏனே?

நான் வாழத் தெரிந்தவளாய்வந்துவிட்டேன் என்று கண்டுகொண்டதாம்

(கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனை எவரையுங்குறிப்பிடுவன அல்ல)

இயற்கையின் தாககுதல்களில் இருநது உங்களை காப்பாற்றுங்கள்

பாலைவன இரட்சகன் ஒட்டகம் நம் வாழ்க்கைப் பாதையில வெயிலிலும் மழையிலும் இருநது காப்பாற்றும பாதுகாவலன்

ஓட்டகமார்க் குடை




ரெஜிஸ்டர் நம்; 12336

★ தரத்தில் உயர்ந்தது
★ விலையில் குறைந்தது
★ நீண்டநாள் உழைப்பிற்கு உத்தரவாத முடையது

ஓட்டக மார்க் குடைகள்

இப்படியாக பாவித்தவர்கள் பாராட்டுகிருர்கள்

இலங்கையில் இப்போது அதிகமாக விற்பனையாகிறது!

இன்னும் எங்களிடம் புதிதாய் இறக்குமதிசெய்யப்பட்ட பார்க்கர் ஜூனியர் பென் 1க்கு ரூ 19/50 விலைக்கு கிடைக்கும்.

ஐக்கியா டிரூப்பரி ஸ்டோர்ஸ்
6 சைனு வீதி, கொழும்பு-11.

போன்: 5113

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நக்ஷத்திரக் காதல்!

மீண்டும் ஹிந்தி நட்சத்திரங்களைப்பற்றி எழுத வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது. வரலக்ஷ்மி 'மேக் அப்' போட்டு தமது நட்சத்திரக் காதலரைக் காண இரவோடு இரவாக சென்று விட்டாரென்ற மூந்தியக் கட்டுரை ஒன்றில் தெரிவித்தேனே அதுபோல நடிகை நிம்மியும் நடந்துகொண்டிருக்கிறார்.

அன்று நிம்மி நடிக்க வேண்டிய இரண்டு மூன்று படங்களுக்கான ஷூட்டிங்குகள் இருந்தன. "மேக்கப்" போட்டு காத்திருந்தார் என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. திடீரென்று தனது காரில் ஏறிக்கொண்டு ஸ்டுடியோவைவிட்டு வெளியே கிளம்பிவிட்டார் காரணம் என்னவென்று யாருக்கும் தெரியவில்லை யாரோ ஒருவர் பிரயப் பிரயத்தனப் எடுத்துக் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார். நிம்மி சினிமா உலகுக்கு வருமுன் அவர் நேசித்து வந்த காதலரைக் காணச் சென்றுவிட்டாராம். அன்று போனவர் மூன்றுவது நாள் தான் வந்து சேர்ந்தாராம். வரலக்ஷ்மி நக்ஷத்திரக் காதலரைத் தேடிச் சென்றார் ஆனால் நிம்மியோ சினிமாவானுக்கு அறிமுகமில்லாத ஒருவரைத் தேடிச் சென்றிருக்கிறார். துணிச்சலான பேர்வழிதான்.

**நர்கிஸ்**

நர்கிஸ்-ராஜ்கபூர் காதல விஷயங்களைத்தான் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்திருக்குமே நர்கிஸும்—ராஜ்கபூரும் சேர்ந்து நடித்த அத்தனை படங்களும் பம்பாய் நகரில் 25 வாரங்களுக்கு மேல் நடைபெற்று 'சில்வர் ஜூபிளி, கோல்டன் ஜூபிளி' கூடப் பெற்றிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் நர்கிஸ்—ராஜ்கபூர் காதல் பற்றிய விளம்பரம்தான் என்று நினைக்கிறேன் ஆனால் இப்பொழுது நர்கிஸைப் பற்றிய புதிய வதந்தி ஒன்று பரவி வருவதைப் பார்த்தால் ராஜ் மிக மனவருத்தம் அடையலாம். ஒரு சிந்தி இளைஞருடன் சதா சுற்றித் திரிகிறாராம். எப்போதும் அவருடன்தான் நர்கிஸைக் காண முடிகிறதாம். அப்படியானால் அந்த சிந்தி இளைஞருடன் நர்கிஸ் நடித்தால் தங்கள் படம் "டைமண்ட் ஜூபிளி" கூட எடுத்துவிடும் என்று நமது பட முதலாளிகள் கருதி நர்கிஸின் புது நண்பரையும் சினிமா உலகில் சேர்த்துவிடுவர். சினிமா உலகுக்கு மேலும் ஒரு புது நக்ஷத்திரம் கிடைக்கலாம்

**பிரேம நாத்—பினாராய்**

ரகசியப் பேர்வழி பிரேம் நாத் பினாராயைத் திரு

ஏ. எம். மீரான்

மணம் செய்யப் போவதாகத் தெரிவித்திருந்தேன்; நவம்பர் 21-ம் தேதியன்று திருமணம் நடக்கப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இம்மாதம் 2-ம் தேதியே திருமணம் நடந்து விட்டது இம்மாத மத்தியில் அமெரிக்கசெல்லவிருக்கும் இந்திய தூது கோஷ்டியுடன் பிரேம் நாத்—பினாராய் தம்பதிகளும் செல்லுகின்றனர்.

காதல் புரியும் நக்ஷத்திரங்கள் பிரேம்நாத—பினாராய் தம்பதிகளின் போக்கைப் பின்பற்றினால் எவ்வளவோ நன்றாக இருக்கும் காதல் புரிந்தால் கல்யாணத்தையும் சேர்த்து வைத்துக் கொள்ளும் நக்ஷத்திரங்கள் என்றென்றும் ரசிகர்களால் போற்றப்படுவர்!

கடந்த வாரம் அதாவது 2ம் தேதி நுரை உலகமே ஒரே கோலாகலமாக இருந்தது. குறிப்பாக பம்பாய் நகரம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தது என்றுதான் சொல்லவேண்டும். இரு நட்சத்திரங்கள் காதல் புரிந்து கல்யாணம்வரை வந்து பின்னர் நட்சத்திரங்கள் இருவரின் பெற்றோர்களும் மனப்பூர்வமாக சம்மதமளித்துத் திருமணம் செய்து கொள்வதென்பது திரை உலகில் நடப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியம்.

படத் தயாரிப்பாளர், டைரக்டர் ருக்கே ஷோரி நடிகை மீனுவை (லாலப்பா பெண்) மணந்து கொள்ள எவ்வளவு தடை இருந்தது தெரியுமா? சுற்றத்தார்களெல்லோரும் புதீசல் மாதிரி கிளம்பிவிட்டனர். திருமணத்தை எதிர்த்து இதைச் சமாளிக்க டைரக்டர் ஷோரிக்கு மிகவும் கஷ்டமாகிவிட்டது. தனது சுற்றத்தார்களுக்கெல்லாம் ஒரு இக்கட்டான வாக்கைக் கொடுத்துவிட்டுத்தான் திருமணம் புரிந்து கொண்டார்

இனி மீனுவை சினிமா நடிகை விடுவதில்லையென்றும் சாதாரண குடும்பப் பெண்களைப்போல் வீட்டுக்குள்ளேயே இருக்கச் செய்வதாகவும் தனது உறவினர்களுக்கெல்லாம் உறுதியளித்தார் ஷோரி.

திருமணம் நடந்த சில மாதங்களுக்குப் பிறகு, தான் "ஏக் தோ தீன்" என்ற படம் தயாரிக்கப் போவதாக அறிவித்தார் பின்னர் பிரதான நடிகை மீனுதான் என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொல்லிவிட்டார். உறவினர்களெல்லாம் இப்பொழுது எப்படியிருக்கிறார்கள் தெரியுமா?

மீனுவுக்கு டைரக்டர் ஷோரி நான்காவது கணவர் என்பதையும் மறந்து விடாதீர்கள்!

நட்சத்திரம், நட்சத்திரத்தையோ அல்லது பிரபலமான குடும்பத்திலோ திருமணம் செய்வது என்றால் அவர்கள் முயற்சியில் எப்படியாவது ஒரு தடை ஏற்பட்டு திருமணம் நின்றுவிடும் அல்லது கலாட்டாக் கல்யாணமாகத்தானிருக்கும். காலஞ்சென்ற நடிகர் ஷியாம்கூட தனது திருமணத்தை அதிகமாக "கலாட்டாக் கல்யாண" மாகத்தான் செய்துகொண்

**எகிப்து நாட்டில்........**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் சிம்மாசனமேறுவாரென்று சமீபத்தில் ஒரு பிரபல சோதிடர் கூறினார் போலும்!)

எதிர்ப் புரட்சியைத் தோற்கடிப்பது ஜனநாயகப் புரட்சியின் 4வது கட்டமாகும் அதில் வெற்றியடைந்தால் புரட்சி பூர்த்தியடையும். அதில் தோல்வியடைந்தால் முழுப் புரட்சியும் தோல்வியடைந்து, மீண்டும் நிலப்பிரபுத்துவப் ஆட்சியைக் கைப்பற்றும். இதுதான் எகிப்தின் இன்றைய நிலைமை. எகிப்தில் இடம்பெறாதது ........ யாருக்குப் ........ முடிவடைகிற தென்பதைக் காத்திருந்து கவனிப்போம்.


# சீனடி தைலம் என்ன செய்யும்?

குணமில்லாவிட்டால் ரூ 500 இனாம் கொடுக்கும் தைலம் பாவித்து வந்தால் தீரும் வியாதிகள்:

1 அண்டவாய்வு, ஹெர்ணியா வாயவு
2 மூலவாய்வு, கிர்மி மூலம், மூலக்கட்டி
3 குடல்வாதம், அபண்டிசய்டிஸ் ஜுரம்
4 நெஞ்சுநோவு, சளி, இருமல், காசம்
5 உடைவு முறிவு, உளுக்கு சுளுக்கு
6 பாரிசவாதம், திமிர் வாதம், முடக்குவாதம்
7 முழங்கால் வலி, முதுகு வலி, முல்வலி
8 காதுவலி, பல்வலி தலை வலி, கபாலவலி
9 வீக்கம், தடிப்புசோகை, பாண்டு.
10 நரம்புத்தளர்ச்சி, பலஹீனம்.
11 சொறி குஷ்டம், புண் கரப்பான் புழுக்கடி
12 இன்னும் பலவித நோய்களைத் தீர்க்கும் ஒரே தைலம் இதுவே பாவிக்கும் முறை மருந்துடன்.



O L M Yoosoof
Specialist in Nervous Diseases

சிறிய போத்தல் 2 தபால் செலவுடன் ரூ 3 50.
" " 5 " " ரூ 5-50.

Rahmania Medical Stores & Dispensary,
327, Dematagoda Road, Maradana, Colombo-9.





## வைஜயந்திமாலா தோன்றும்
# 'அஞ்ஜம்'

தென்னிந்திய பிரபல நட்சேத்திரம் வைஜயந்திமாலா தோன்றும் ஹிந்தி பேசும் சித்திரம் "அஞ்ஜம்" இப் படம் இப்போது பாருதாவை மசன்ரல் பட மாளிகையில் திரையிடப்படுகிறது.

ஒரு பெண் குடும்ப வாழ்க்கையில் தனக்கு இருக்க வேண்டிய சரிபாதி அந்தஸ்துக்காக, தன் கணவனுடன் நடத்தும் மகத்தான போராட்டத்தை அடிப்படையாகக்கொண்டது கதை. பணமும், அந்தஸ்தும் கொண்ட அசோக் என்னும் வாலிபனை மணந்த சோபா என்ற படித்த பெண் தன் கணவனை வெறும்கேளிக்கைகளிலும், கெட்ட சகவாசங்களிலுமிருந்து காப்பாற்றி ஒரு உத்தமனாக்குகிறாள். இதற்கு நேர்மாறாக நடந்து தன் கணவனையே சுட்டுக் கொன்று ஈற்றில் தானும் பிறிதொருவனால் கொல்லப் படுகிறாள் மீனா என்னும் நாரீமணி

அசோக்காக நடிக்கும் பிரேம் நாத் நன்றாக நடித்திருக்கிறார். சோபாவாக காட்சியளிக்கும் வாழ்க்கை புகழ் வைஜயந்திமாலா கண் கவர் நடனங்கள் மூலமும் கவர்ச்சிகரமான நடிப்பினாலும் படத்திற்கு வெற்றியுண்டாக்கியிருக்கிறார். மற்றும் குல்தீப், யாக்கூப் துமாரி ஆகியோரும் குறை சொல்ல முடியாதவாறு நடித்திருக்கிறார்கள்

பல கட்டங்களில் பொறுமையோடிருந்து கருத்தைக் கவனித்து ரஸிக்க வேண்டிய படம் இது.

—எஸ். ஆர்

டார். பிரபல ஜமீன்தார் ஒருவரின் மகளான தாஜி என்பவரை மணம் புரிய விரும்பினார். தாஜிக்கும் விருப்பம்தான் ஆனால்பெற்றோரின் சம்மதப் பூஜ்யமாக இருந்தது கடைசியில் இருவருக்கும் திருமணம் நடந்து விட்டது—பெற்றோரின் சம்மதம் இல்லாமலே!

கடந்த வாரம் நடைபெற்ற திருமணம் இருக்கிறதே அது நக்ஷத்திரக் காதலுக்கெல்லாம ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நடிகை பினாராய்—சொந்தப் பெயர் கிருஷ்ணசரின்—கல்லூரியைவிட்டு வெளிவந்ததும் அவரைத் திரையுலகம் பிடித்து இழுத்துக் கொண்டது. முதல் படத்திலேயே பிரமாதமான வெற்றி. 'புன்னகை ஒன்றுக்கே நாம் கொடுத்த துட்டு சரியாட்போச்சே!" என்று தரை மகாஜனங்கள் சொல்லுமளவுக்குக் கொள்ளை அழகு! கேட்க வேண்டுமா! படத்தயாரிப்பாளர்கள் வந்து குவிந்துவிட்டனர். பல படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டார் ஹிந்தியில் தயாரிக்கப்பட்டும் 'அவ்ரத்" (ஸாம்ஸன் அன் டிலைலா) படத்தில் பினாராய் கதாநாயகியாக நடிக்கின்றார் ஸாம்ஸனாக பிரேம் நாத் நடிக்கின்றார். இவருக்கும் காதல் வளர்ந்த கதை பகிரங்கமாகாமல் கல்யாணச் செய்திமட்டும்தான் கிடைத்தது. நவம்பர் 21ம் தேதி நடைபெறவேண்டிய திருமணம் இம்மாதம் இரண்டாம் தேதியே நடந்துவிட்டது. இந்திய ரயில்வேயில் முக்கிய உத்தியோகஸ்தராகப் பணியாற்றும் பினாராயின் தந்தை திருமணத்தன்று களிப்போடு காணப்பட்டார். மணமகன் பிரேம்நாத் மணமகளின் இலலத்துக்கு குதிரையின்மீது பவனி வந்தது கண்கொள்ளாக் காட்சி. குதிரையின் சடிவாளத்தின் இரு பகுதிகளையும் ராஜ்கபூரும் திலிப்குமாரும் பிடித்துக் கொண்டு வந்தது ஒரு தனி அழகோடு விளங்கியது பிரேம் நாத்தின் தந்தையும் ஊர்வலத்தில் பூரிப்போடு காணப்பட்டார். பின்னர் தோட்டத்தில் ஒரு பிரமாதமான சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. திலிப் வாயில் சிகரட்டுடன் கைகளைத் தட்டிக் கொண்டு நாட்டியமாடத் துவங்கிவிட்டார். ராஜகபூர் பாண்டுவாத்தியத்தை முழக்கிக் கொண்டு சங்கீதத்தைக் கொலை செய்து கொண்டிருந்தார். ஆனால் தமாஷாக இருந்தது. சங்கீத டைரக்டர் ஜெய் கிஷன் பாட்டுக்களை நல்ல முறையில் பாட எவ்வளவோ முயற்சி செய்தும் நடக்கவில்லை. அவ்வளவு ஆரவாரம் குதூகலம்

மணமகனின் மைத்துனரான ராஜ்கபூரும், நண்பர் திலிப்குமாரும் வந்திருந்தோரை உபசரித்தனர்.

இன்னொரு பெரிய அதிசயம்! கல்யாணத்துக்குச் சிலமணி நேரங்களுக்கு முன்னாதான் மணமக்களிருவரும் வர்மா பிக்சர்ஸாரின் "அவ்ரத்"தில் முக்கியமானதொரு காதல் கட்டத்தில் நடித்துவிட்டு வந்தனர்

இன்னொன்று: அடுத்த வாரம் அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க அமெரிக்கா செல்லும் இந்திய சினிமா தூது கோஷ்டியில் பிரேமநாத் பினாராய் தம்பதிகள் கலந்து கொள்ளுவர். அங்கு தங்கள் தேனமதி (ஹொனிமூன்) பிரயாணத்தை அனுபவிப்பார்கள். உலகத்தையே ஒரு சுற்று சுற்றி விட்டுத்தான் வருவர்.

எல்லாம் நட்சத்திரக் காதலின் மகிமைதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ட்ரல் திரையில்



அகில இந்தியாவையும் ஆட்கொண்டு வெற்றிவாகையுடன்
ஈழவளநாட்டுக்கு விஜயமளித்திருக்கும் மகத்தான சமூகச் சித்திரம்

**வைஜயந்திமாலா** (ரசிகர்களின் சொப்பன சுந்தரி)

**பிரேம்நாத் • யாகூப் • குல்டீப் • துலாரி**

முதலியோர் நடிக்கும்

தினசரி மாலை 3-15
6-30 இரவு 9-30 மணி
ஞாயிறு காலை 10 மணிக்கு
மெட்னி காட்சி

## அஞ்ஜம்

'ச்யூ'வில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் 2 டிக்கெட்டுகள் மட்டும் தரப்படும். 'பெல்கனி' முன்கூட்டி ரிசர்வ் செய்துகொள்ளலாம்.





### மகேந்திரா (யாழ்ப்பாணம்)

மகத்தான மூன்றாவது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கு ஞாயிறு காலை 10-30 மணி மெட்னி

நர்கீஸ், ராஜ்கபூர் திறம்பட நடித்த

**• அவாரா •**

---

# முருகன் தியேட்டர் (ஜிந்துப்பிட்டி)

## 105வது வெற்றி தினம்

கல்லையும் கரையச்செய்யும் ஓர் குடும்பத்தின் சோகநாடகம். கண்ணின் மணிபோன்ற பாவையைக் குருடாக்கியது அது ஏழுபேரை ஒருவர் பின் ஒருவராகப் பலி வாங்கியது

முற்றிலும் உணர்ச்சிக்கோவையால் பின்னப்பட்ட சித்திரம்
உள்ளத்திற்குச் சவுக்கடிதரும் உணர்ச்சிச் சித்திரம்

# என் தங்கை




எம் ஜி ராமச்சந்திரன், பி. எஸ். கோவிந்தன் மாதுரிதேவி, வி சுசீலா நடிப்பது

இம்மாதம் 13ம்உ சனிக்கிழமையும் 14ம்உ ஞாயிற்றுக்கிழமையும்
தினசரி பிற்பகல் 1-30 மணி, மாலை 5 மணி, இரவு 9-30 மணி காட்சிகளின்

இடைவேளையில் பிரபல ஆந்திர நட்சத்திரம்

## மா து ரி தே வி

மேடையில் நேரிலே காட்சியளிக்கிறார் அத்துடன்
பின்னணிக் குரலழகி

### ஸ்ரீமதி கஸ்தூரி & கோஷ்டியாரின்

மேடை சங்கீதக் கச்சேரியும் படத்தின் இடைவேளைகளில் நடைபெறும்

அரிய சந்தர்ப்பம்! பார்க்கத்தவறாதீர்கள்!

கட்டண விகிதம் ரூ 3-60, ரூ 2-25, ரூ 1-10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாசிகசாலை

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியம் வேண்டிய சாதனங்களுள் "வாசிகசாலை"யும் ஒன்று அந்நாட்டு மக்கள் தங்கள் அறிவை வளர்க்க ஏற்ற ஓர் சாதனம் வாசிகசாலை.

வாசிகசாலை ஓர் பொதுவான இடத்தில் அமைக்கப்பட வேண்டும். அது ஏழை—பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வின்றி எல்லோருக்கும் உபயோகப்படக்கூடிய முறையில் இருக்கவேண்டும்

வாசிகசாலையில் அறிவை வளர்க்கக்கூடிய நல்ல பத்திரிகைகளும் பெரியார் வாழ்க்கை வரலாறு, நல்ல கட்டுரைப் புத்தகங்கள் ஆகியவைகள் இருக்க வேண்டும் ஆபாசமான பத்திரிகைகளோ, புராணக் கதைகளையோ வாசிப்பதில் மக்கள் அறிவு வளர்ந்து விடாது

ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் அவசியம் படிக்கவேண்டியது பத்திரிகை அப்போதுதான் ஏனைய நாடுகளின் சீர்திருத்தங்களையும் உலக விஷயங்களையும் அறியலாம் இன்னும் புதுமையும், புரட்சியும் ஓங்கி வரும் இவ்விருபதாம் நூற்றுண்டின் இணையற்ற ஜீவநாடியான பத்திரிகையைப் பணமுள்ளோர் தங்கள் வீட்டுக்கு அழைப்பித்துப் படித்துப் பயன் பெறலாம். ஏழைகள் வாசிகசாலையில் பத்திரிகைகளை வாசித்துத் தங்கள் அறிவை வளர்க்கலாம்

ஒரு நாட்டு மக்கள் அறிவில் சிறந்தோர்களாய் வாழ வேண்டுமானால், உலக அறிவாளர் வரிசையில் ஓர் தனி இடத்தைப் பெற வேண்டுமானால் அந்நாட்டில் அவசியம் வாசிகசாலை அமைக்கப்பட வேண்டும். வாசிகசாலை அறிவைப் பெருக்கக்கூடிய இடமாத்திரமன்று, அது பொழுது போக்குக்கு ஏற்றதோர் சாதனமாயும் அமையும்

ஆகவே இளைஞர்களாகிய நாங்கள் எங்கள் கிராமங்களிலும் ஒவ்வொரு வாசிகசாலை அமைத்து அதில் நல்ல புத்தகங்களை வாசித்து எங்கள் அறிவைப் பெருக்கி எதிர்கால அறிஞர்களாய் விளங்குவோமாக!

யூ. எல். தாவூது.
ஜூனியர் பாடசாலை,
ஏறாவூர்

## அறிவு

அறிவென்பது ஓர் பொற்சுரங்கம் ஆனால் அந்தச் சுரங்கம் மிகவும் ஆழமானது அதிலே தருவிக் கிண்டக் கிண்டத்தான் பொன்களை எடுக்கலாம். மனிதனுக்கு அறிவே மிகப் பிரதானமானது. அறிவே ஓர் மனிதனது உயிர் நாடியுங்கூட. எந்த ஓர் சமுதாயமும் மக்கள் மத்தியில் மதிப்பற்று, மானமிழந்து மட்ட ரகமாகக் காணப்படுகிறதோ, அதன் பொருள் அந்த சமுதாயத்திலே போதிய அறிவில்லை என்பதுதான். மங்கா மரகதமாய், புகை படரா ஓவியமாய் மனித சமுதாயம் பொலிவுற வேண்டுமானால் அதற்கு அத்தியாவசியமாக வேண்டப்படுவது அறிவேதான். நீதியின் நிழலிலும், உண்மையின் மடியிலும், நேர்மையின் குடையிலும் மக்களை வாழவைப்பது அறிவேதான்.

இன்றைய உலகில் பணச் செல்வமாக இருந்தாலென்ன பலச்செல்வமாக இருந்தாலென்ன எல்லாச் செல்வத்தையும் அழித்துவிடலாம் ஆனால் அறிவுச் செல்வத்தை மட்டும் அழித்திட எவராலும் முடியாது. அஞ்ஞானமென்னும் கோர இருளை அகற்றி மெஞ்ஞானமென்னும் மெய்யொளியைப் பரப்புவதும் அறிவேதான். மனித சமுதாயத்தை குன்றிலிட்ட தீபம் போல மாண்புற்று பிரகாசிக்கச் செய்வதும் அறிவேதான். பழைமை படிந்த பாருக்கு புதுப் புது புதுமைக் கருத்துக்களைப் புகுத்துவதும் அறிவேதான். இத்தன்மையாய அறிவை கண்ணெனக் கொள்வோமாக

தா. சின்னலெவ்வை
அரசடி மிசன் பாடசாலை,
மட்டக்களப்பு.

## பாயும் பாவை



சமீபத்தில் ஹெல்சிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டில் பிரிட்டனைச் சேர்ந்த திருமதி ஸ்லா லர்வில் 5 அடி 7⅜ அங்குலம் உயரே பாய்ந்து பெண்களுக்குரிய இரண்டாவது பரிசைப் (வெள்ளி 'மெடல்') பெற்றுள்.

## தமிழனைத் தட்டி எழுப்பிய பாரதி

[illegible]ரதியார் தமிழ நாட்டின் தலைசிறந்த கவிஞராவர். தமிழகத்தின் தவப்பயனாய்த் தோன்றி தேசபக்தராய், சுதந்திர வேட்கையராய், வீரராக வீறுகொண்டெழுந்து விடுதலைப் போரில் முன்னணி வகித்து வீர முழக்கம் செய்தவர்களில் பாரதியாரே முதல் ஸ்தானம் வகிப்பவராவர். அமுதூறும் தீந்தமிழ்ப் பாடல்களும் பாடியவாய் தேனொழுகும் பாடல்களும் தந்தளித்த கவி வள்ளல் பாரதியாரேயாவர் தமிழ் மொழிக்கு-தமிழ் மக்களுக்கு அழியாத உயிரும் ஒளியும் கொடுத்தவர் பாரதியாரே உறங்கிக் கிடந்த தமிழனை உற்சாகமூட்டித் தட்டி எழுப்பி, தமிழனை சுதந்திர வேட்கையராகச் செய்யும் பாடல்களும் தந்த வீர மகன் பாரதியார்தான்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் தமிழ் மக்கள் ஆங்கில மொழியில் மோகம் கொண்டு, தமிழ் மொழியை அலட்சியம் செய்து வந்தார்கள். இதைப் பார்த்த பாரதியார் உள்ளம் குமுறியது சுதந்திர வேட்கை அவரின் உள்ளத்தை வாட்டியது உறங்கிக்கிடந்த தமிழர்களைப் பார்த்து 'யாம் அறிந்த மொழிகளில் தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்று கூறியதுமல்லாமல் இதை ஒவ்வொரு தமிழ் மக்களும் உணரவும் செய்தார்.

தமிழகம் அவரது தகைமையை உணராவிட்டாலும் அவருக்குத் தமிழ், தமிழன்மீது உள்ள பற்றுதல் சிறிதளவேனும் குறையவில்லை. இல்லை என்றால் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று பாடியிருப்பாரா? பாரதியாரின் காலத்தில் சாதி சமயக் கொடுமைகள் எங்கும் பரந்திருந்தன. தமிழ் மக்களின் வேற்றுமையைப் போக்க 'எல்லோரும் ஓர் குலம்' எல்லோரும் ஓர் இனம், 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று முழக்கம் செய்தார். பாரதியார் புரட்சி மனப்பான்மை கொண்டிருந்தாலும் அவருக்குக் குழந்தையுள்ளமும் இல்லாமல் இல்லை. இன்றேல் 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்றும் 'சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே-அதை நீ தொழுது படித்திடடி பாப்பா' என்று [illegible] பாடியிரு[ப்பாரா]? ருப்பாரா?

குமுறும் இதயத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு அமுதூறும் கீதப் பாடிய கவிஞன், தமிழன் மறுமலர்ச்சிக்காக வித்திட்ட அமரனை, உணர்ச்சியற்றுக் கிடந்த தமிழ் மக்களை தட்டி, வீறுகொண்டெழும்படி செய்த வீரனை, தமிழர்களின் சுதந்திரத்திற்கு முரசு கொட்டிய மேதையை இலக்கிய சேவை வாழவைத்ததா? தமிழ் மக்கள் உணர்ந்தார்களா? அவரது குடும்பம் வறுமை அரக்கனுக்கு பலியாய்விட்டது. இதை எண்ணும்பொழுது ஒவ்வொரு தமிழன் இதயமும் துடி துடிக்கின்றது. வாழ்க பாரதியார்! வாழ்க தமிழ்!

"தமிழ் நேசன்"
நல்லூர்,
யாழ்ப்பாணம்

## சிந்தனைச் சுடர்

(தொட்டியவர்
கா. அ. ஷரீப்தீன்)

மனிதன் காட்டுமிராண்டியாய்த் திரிந்தபொழுது கடவுளுணர்வு பெற்றிருக்க முடியாது; பிறகு தேவையுமில்லை. தெய்வப் பிறவியெடுத்த மனிதன் இவ்வுலகில் எப்போதும் இருந்ததுமில்லை! இயற்கை உணர்வுக்கு எட்டாத தெய்வீகம், அவ்வுணர்வின் சிருஷ்டி கர்த்தாவால் அறிவிக்கப் பெற்றிருத்தல் கூடும்! "இஸ்லாமியம்" ஒளிரும், பதத்தறிவின் விசேஷம் இத்தன்மைத்தாயதே.

—ஹாபில்

பணம் பண்பு தருமா? தரும்! அறும்பு ஏறிக் குறும்பு வழியும்பொழுது, அப்பக்குவப் பண்பு பாரில் ஜாதி இரண்டெனப் பிரிக்கும்; ஒன்று ஏழை; மற்றது பணக்காரன்.

—சிராஜ்

சிப்பந்தி தன் ஆரோக்கிய நிலையைப் புறக்கணித்தேனும், பொருளீட்டித் தர வேண்டுமென்று விழைபும் ஸ்தல சொந்தக்காரனுக்கு அப்பொருள் தத்தம் தடும்பப் பராமரிப்பைப் பேணுவதற்கு மாத்திரமல்ல; மனக் குரங்கின் கையிலே கொள்ளியைக் கொடுத்தாட்டவும் பயன்படுகிறது.

—ஹாபில்


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174 ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாக கழித்து, அசதி, சோம்பல், மேல் கால் கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள் சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை பெரியது ரூ 5-75 சிறியது ரூ 3-00 இத்துடன் "ஆனந்தா நெல்லிக்காய் தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலக்கூடு பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அனேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்புவோம்

பெரியது ரூ 5-75 சிறியது ரூ 3-00 வி.பி.பி செலவு வேறு

புரோப்ரைட்டர்:- M பொன்னையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர். 174 C, செட்டியார் தெரு, கொழும்பு-11



உயிர்வாழ மனிதனுக்கு அவசியமானது எது? உணவு.




அந்த உணவை ருசிப்படுத்துவது எது? அதுவே

கமலா பப்படம்

(ரிஜிஸ்டர்ட் நிர் 13207)

ஒரு முறை பாவித்துப் பார்த்தால் உண்மையை உணருவீர்கள்

முதல்ரக உளுந்தால சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது. குணம், மணம், ருசி நிறைந்தது.

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.

Proprietor: பி. எம். ஹமீது,
197, கெய்ஸர் வீதி, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்பிரிக்காவில் பொங்கும் மனித பூகம்பம்

## நிறவெறிஆட்சியைச்சுட்டுப் பொசுக்கும்

## இரகசியச் சங்கங்களும் அங்கே இயங்குகின்றன

இருண்டகண்டம் முழுவதும் சுதந்திரப் போராட்டத் தீ பற்றியெரிகிறது. "பொதுஜன அபிப்பிராயத்திற்கு செவிசாய்த்தல் தற்கொலை செய்துகொள்வதாகும்" என்று கூறும் டாக்டர் மலானின் நிறவெறி ஆதிக்கத்தை எதிர்த்து தென்னாபிரிக்கா பூராவும் சத்தியாக்கிரகப் நடைபெறுகிறது சுதேசிகளும் இந்தியர்களும் இதுவரை 3000 சத்தியாக்கிரகிகளுக்கு மேல் இருட் சிறையினுள் தள்ளப்பட்டுவிட்டார்கள். சத்தியாக்கிரகிகளுக்கு மிருகத்தனமாக சவுக்கடி கொடுக்கப்படுகிறது. "சுதந்திரப் பிரேமிகளுக்கு சவுக்கடி என்றால் போராட்டம் வெற்றியடைவது நிச்சயம்" என்றுதான் அர்த்தம்.

உலக மக்கள் இப்போராட்டத்திற்கு ஆதரவு காட்டுகின்றனர் ஐக்கிய நாட்டு சபையில் மீண்டும் இப்பிரச்னை கொண்டுவரப்படும்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் சஹாரா பாலைவனத்திற்கு தென்திசையிலுள்ள பிராந்தியங்களுக்கு இருண்ட ஆப்பிரிக்கா என்ற ஓர் பெயருண்டு அது பல பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழிருக்கிறது. ஏகபோக உரிமையுள்ள கம்பெனிகள் இருண்ட ஆப்பிரிக்காவின் இயற்கை செல்வத்தையும் வளமுள்ள நிலத்தையும் சுரண்டுகின்றன அவைகள் உணவு, மூலப்பொருட்கள் முதலியவற்றை அயல்நாடுகளுக்கு கொண்டு செல்லுகின்றன. சுதேசிகள் உரிமைகள் பறிக்கப்பட்டு வெள்ளையர்களால் மிருகத்தனமாகச் சுரண்டப்படுகின்றனர்.

### 23ல் ஒரு பங்கு

ஆப்பிரிக்கர்களின் வாழ்க்கைச் செலவு படுபாதாளத்தில் வீழ்ச்சியடைந்துவிட்டது பிரிட்டிஷாரின் அடிமைப் பிரதேசமாகிய வடரொடேஷியாவில் சுரங்கத்தில் வேலை செய்யும் வெள்ளைத் தொழிலாளிக்கு கிடைக்கும் சம்பளத்தில் 23ல் ஒரு பங்குதான் அதே வேலையைச் செய்யும் சுதேசித் தொழிலாளிக்கு கொடுக்கப்படுகிறது பெல்ஜியன் கொங்கோ பிரதேசத்தில் ஒரு நீக்ரோ தொழிலாளிக்கு கொடுக்கப்படும் கூலி 7-15 பிராங்குகளைத்தான் (இது இரண்டு தீப்பெட்டிகளின் விலைக்குச் சமானம்)

ஏகாதிபத்தியவாதிகள் இந்த அடிமைப் பிரதேசங்களை நீண்டகாலமாக வெளி உலகத் தொடர்பின்றி தனிப்படுத்தி வைத்திருந்தனர் அங்கு நடைபெறும் அட்டூழியங்களோ ஏகபோக உரிமை கொண்ட முதலாளிகள் அடிக்கும் பகற்கொள்ளையோ உலக மக்களுக்குத் தெரியாதிருந்தன. அடிமை எஜமானர்களாகிய இந்த வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் ஆப்பிரிக்க சுதேசிகளை அடிமைக்குட்டையில் சாசுவதமாக மூழ்கி வைப்பதற்காக அவர்களது பழம்பாங்கான புராதன நிலைமையைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்கின்றனர். ஆனால் இந்த முயற்சிகள் பலிக்க வில்லை,

### போராட்ட தளங்கள்

சமீப வருடங்களில் இருண்ட ஆப்பிரிக்காவில் அடிமை ஆட்சிக்கெதிராக மக்கள் போராட்டம் ஸ்தாபனரீதியாகப் பொங்கிவிட்டது பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த மேற்கு ஆப்பிரிக்கா, தென்னாபிரிக்கா, கோல்ட்கோஸ்ட், நைஜீரியா, உகெண்டா, கேனியா ஆகிய பிரதேசங்கள் விடுதலைப் போராட்டத் தளங்களாக மாறிவிட்டன பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவில் "ஆப்பிரிக்க ஜனநாயக சங்கம்" என்ற பெயருடன் ஒரு சக்தி வாய்ந்த மக்கள் ஸ்தாபனமொன்று தோன்றியிருக்கிறது. அதில் பலவேறு மதங்களைச் சேர்ந்த, வெவ்வேறு அரசியல் கொள்கையுடைய 10 லட்சம் சுதேசிகள் அங்கம் வகிக்கின்றனர். அடிமை ஆட்சியை ஒழித்துக்கட்டி தேச சுதந்திரத்தைப் பெற சங்கற்பம் செய்துகொண்ட அனைவரும் இந்த ஸ்தாபனத்தில் சேரலாம்.

சுதேசிகள் மத்தியில் ஏராளமாக விநியோகிக்கப்படும் பல தேசியப் பத்திரிகைகளை இந்த ஸ்தாபனம் வெளியிடுகிறது அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக சுதேசிகளிடம் வாங்கப்படும் விளைபொருட்களின் விலையைக் கூட்டுவதற்காகவும் சம்பளத்தை உயர்த்துவதற்காகவும் இந்த ஸ்தாபனம் போராடுகிறது. மேற்கு ஆப்பிரிக்காவில் 1947-48ல் 20,000 ரெயில்வே தொழிலாளர்கள் 5 மாதங்களாக நடத்திய மாபெரும் வேலைநிறுத்தத்தை இந்த ஜனநாயக சங்கம் ஆதரித்தது.

### அடக்குமுறை

ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு பிரதேசத்தில் கிளர்ந்தெழுந்த மக்கள் இயக்கத்தில் ஜனநாயக சங்கமும் கலந்துகொண்டது. இவ்வியக்கத்தின் மீது பிரெஞ்சு சர்க்கார் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. ஜனநாயக சங்கத்திற்கு மிகுந்த செல்வாக்குள்ள ஐவரிகோஸ்ட் பிரதேசத்தில் சங்கத்தை ஒழிக்கக் [illegible] சிருஷ்டிப்பதற்காக சர்க்கார் போராட்டத்தைத் தூண்டிவிட்டு [illegible] தலைவர்களையும் [illegible] களையும் கைது செய்தது. சுமார் 1000 பேர்வரை இருட் சிறையினுள் தள்ளப்பட்டார்கள் டஜன் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் 1950 பெப்ருவரியில் பிரெஞ்சு அதிகாரிகள் ஜனநாயக சங்கத்தைச் சட்டவிரோதமான ஸ்தாபனமென்று பிரகடனப்படுத்தினர் இருண்ட ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு பிரதேசத்தில் இன்றும் போலீஸ் அடக்குமுறை தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது. இரு ஆண்டுகளாக வஞ்சிறையில் காட்டுமிராண்டித்தனமாக சித்திரவதை செய்யப்படும் ஜனநாயக சங்கத்தைச் சேர்ந்த 400 தேசபக்தர்கள்மீது பல மாதங்களாக 'அபிஜான்' கோர்ட்டில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அடக்குமுறையின் முன்னால் மக்கள் தலைகுனியவில்லை. மாபெரும் கண்டனக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் பொது வேலைநிறுத்தங்களையும் ஜனநாயக சங்கம் நடத்தி வருகிறது பிரெஞ்சு சாமான்கள் பகிஷ்கரிக்கப்படுகின்றன.

### முன்னணியில் தொழிலாளர்கள்

பிரிட்டிஷாரின் "டொமீனியன்" ராஜ்யமான தென்னாப்பிரிக்காவிலே விடுதலைப் போராட்டம் வெற்றிப் பாதையில் விரைந்து செல்கிறது. அமெரிக்க, பிரிட்டிஷ் பாங்கர்களின் ஆதரவைப் பெற்ற மலானின் அரைகுறை பாஸிஸ அரசாங்கம் ஐரோப்பியர் அல்லாத மக்களைப் பொது வாழ்க்கையினின்று விரட்டியடித்து, அவர்களின் அரசியல் கட்சிகளையும் தடை செய்து அடிமை முறையை நிலைநிறுத்தி வருகிறது அந்நாட்டு மக்களில்-110 லட்சத்தில்-9 லட்சம் பேர் வெள்ளையர் அல்லாதவர்கள். தென்னாபிரிக்காவில் தொழிலாளர் சுமார் 20 லட்சம் பேர் இருக்கின்றனர். அவர்களில் போராட்டங்களிலும் வேலைநிறுத்தங்களிலும் அனுபவம்மிகுந்த தொழிலாளர்கள் 2 லட்சத்திற்குமேல் தொழிற் சங்கங்களில் திரண்டிருக்கின்றனர் ஜனநாயக சுதந்திரத்திற்காகவும் சீர்திருத்தங்களுக்காகவும் மக்கள் போராட்டங்களை நடத்தும் சில பொது ஸ்தாபனங்களும் அந்நாட்டில் உண்டு. இக்கட்சிகள் நிறவெறியர்களின் கொள்கையை அம்பலப்படுத்தி எல்லா மனிதர்களும் சரிநிகர் சமானமே என்ற கொள்கையை நிலைநாட்டுவதற்காக சுதந்திரமும் சுயாட்சியும் பெறும் உரிமைகளை மறுப்பவர்களுக்கு [illegible] துணிச்சலுடன் போராடுகிறார்கள்.

பிரிட்டிஷ் காலனியான கோல்ட்கோஸ்டில் க்வாமே [illegible] ஆட்சியை எதிர்த்து முன்னணியில் நின்று போராடுகிறது. கோல்கோஸ்டு பாராளுமன்றத்திற்கு கடந்த பெப்ருவரியில் நடைபெற்ற தேர்தலில் ஏறத்தாழ மக்கள் அனைவரும் மக்கள் கட்சிக்கே வாக்களித்தார்கள். 38 ஆசனங்களில் 34 மக்கள் கட்சி கைப்பற்றியது. ஆனால் இப்பாராளுமன்றத்தின் கையில் முழு அதிகாரமும் கொடுக்கப்படவில்லை

### நைஜீரியாவில்

மற்றொரு பிரிட்டிஷ் காலனியாகிய நைஜீரியாவில் 250 லட்சம் மக்களின் விடுதலைப் போராட்டம் நைஜீரியத் தேசியக் கவுன்ஸில், தேசியத் தொழிலாளர் சம்மேளனம் ஆகிய ஸ்தாபனங்களின் தலைமையில் நடைபெறுகிறது. அங்கே 1949 நவம்பரில் நடைபெற்ற பொது வேலைநிறுத்தம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஆப்பிரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றுபடும்படி செய்துவிட்டது. இவ் வேலைநிறுத்தத்தில் தொழிலாளர் பலரைப் போலீஸார் சுட்டுக்கொன்றனர். ஆயினும் அடக்குமுறை சுதந்திரப் போராட்டத்திற்குப் புத்துயிர் அளித்துவிட்டது உலக தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் இங்கு மூன்றாவது சக்தியாக விளங்குகின்றன.

### இரகசிய இயக்கம் இருண்ட கண்டத்தில்

ஜனநாயக சீர்திருத்தங்களுக்காக நடைபெறும் இயக்கம் ஆப்பிரிக்காவிலிருக்கும் இதர காலனிகளுக்கும் பரவிவிட்டது. பெல்ஜியன் கொங்கோவில் இரகசிய மக்கள் இயக்கமொன்று இயங்குகிறது. பஸுடோலாண்ட் விவசாயிகள் லீக்கும், கெனியா சுதேசிகளின் சங்கமும், நியாஷாலாண்ட் தேசிய காங்கிரஸும், வாலிபர் சங்கங்களும் சுதந்திரப் போராட்டங்களில் முன்னணி ஸ்தாபனங்களாக விளங்குகின்றன.

இருண்ட ஆப்பிரிக்காவில் மூலைமுடுக்குகளிலும் பட்டிதொட்டிகளிலுமுள்ள மக்கள் இயங்கத் தொடங்கிவிட்டனர். தங்களின் நாடு நாட்டின் இயற்கை வளங்கள் முதலியவை தங்களுக்கே உரியவை என்றுணர்ந்த அந்த மக்கள் உரிமையைப் பெறுவதற்காக போர்க்கொடியை உயர்த்திவிட்டார்கள்.

அடிமை நாட்டிலே சமாதானத்தைச் சுதந்திரத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாது. சர்வதேசிய சமாதான முன்னணியில் சேரும் ஆப்பிரிக்க மக்கள் உலக மக்களின் ஆதரவுடன் மலான் ஆட்சியினின்றும் ஏகாதிபத்திய பிடியினின்றும் பூரண விடுதலை பெறுவது திண்ணம்.

—எஸ். டட்லின்


## மூல வியாதிக்கு

### கருணைக்கிழங்கு லேகியம்

எல்லாவித மூலம், பவுத்திரம், வியாதிகளையும் சத்திர சிகிச்சையின்றி சுலபமாகவும் நிரந்தரமாகவும், நிச்சயமாகவும் குணப்படுத்தக்கூடிய அரிய சஞ்சீவி. ஆயிரக்கணக்கான நோயாளர்கள் குணமடைந்துள்ளனர். மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல், பவுத்திரம், கட்டி, நீர்க்கசிவு, குடலிரைச்சல், மலபந்தம் தேககாங்கை யாவும் அறவே ஒழிந்துவிடும். உத்திரவாதமான மருந்து பழனி தண்டபாணி வைத்தியசாலையின் பிரசித்திபெற்ற தயாரிப்பு.

4 நாள் டின் 1-க்கு ரூ. 7-50
மூலமுளைக்களிம்பு புட்டி 1க்கு ரூ. 1-00

### நெல்லிக்காய லேகியம்

(VITAMIN சத்துக்கள் நிறைந்தது.)

உடல் மெலிந்தவர்களுக்கும் பலவீனப்பட்டவர்களுக்கும் பிரசித்தமான மருந்து. இருதயம், சுவாசசயம், குடல், எலும்புகள் வலுப்படும் பசி, ஜீரணசக்தி உண்டாகும். இருமல், க்ஷயம், பாண்டு, சோகை, மூல வியாதிகளுக்கும் உதவியான மருந்து

20 ரூபா எடை விலை ரூ. 4-8-0

### இராஜவீரிய லேகியம்

நிகரற்ற தாதுபுஷ்டி மருந்து. ஜீவாதாரக் கருவிகளை போஷித்து சரீர புஷ்டியும், நரம்புகளுக்கு வலுவும் இல்வாழ்க்கையில் இன்பமும் உண்டாக்கும். ருசியுள்ள மருந்து.

20 ரூபா எடை விலை ரூ. 4-8-0

பார்சல் செலவு சேர்த்து M. O அனுப்பவும்.

கேட்கவேண்டிய இடம்:

## தண்டபாணி வைத்யசாலை

பெரியகடைவீதி, பழனி (S. I.)

Thandapani Medical Hall PALANI (S. I.)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்லி வெம்பிளி வெல்லிங்டன்

[கொழும்பு] [கண்டி] [திரிகோணமலை]

தினசரி பாலை 6 மணி இரவு 9-30 மணி சனி ஞாயிறு 2-30 மணி 6 மணி 9-30 மணி ஞாயிறு காலை 10 மணி விசேஷ காட்சி

## தீவொளி
(நுவரேலியா)

## மாடர்ன்
(பதுளை)

★ உஜ்ஜயினி !........அது ஓர் சாம்ராஜ்யம் ஆள்பவன் வீரசேன மன்னவன். கொடுங்கோலால் செங்கோலைக்கொண்டவன். இந் நாட்டிலே நடக்கும் நிகழ்ச்சிகள் அனந்தம்.

★ வாழ்க்கைத் துணைவனையும், வாழ்வின் மைந்தனையும் இழந்த ஒரு பெண்ணின் மனோ நிலை எப்படியிருக்கும்? இதை நந்தினி உணர்த்துகிருள். "கொன்றவன் தந்தை குற்றவாளி குழந்தை" என்கிருள். சத்ருவை மித்திரனாக நினைக்கிருள். அவள் தர்மதேவதா எனவே திக்கற்ற நந்தினிக்குத் தெய்வம் துணைசெய்கிறது.

★ பெற்றதாயும் பிறந்த நற்புதல்வனும் பரஸ்பரம் கொள்ளும் பந்தபாசம். அதுமட்டுமா? காதல் பரவமும் கன்னிப்பருவமும் கலந்து மகிழும் கவின் மிகு காட்சிகள்.

★ சூழ்ச்சி, சுயநலம், வஞ்சகம், போட்டி, பொருமை, சபதம், நட்பு முதலிய பல்வேறு சக்திகள் அங்கு வேலைசெய்கின்றன. அந்த உஜ்ஜயினி மகுடத்தின் ரசமான கதை தான் இது

இன்னும்.

காணற்கரிய சந்தர்ப்பம் கண்டுகளிக்கத் தவறாதீர்கள்.



ராகினியாரின்

# தர்ம தேவதா

நடிகர்கள் :
லிங்கமூர்த்தி
முக்கமாலா
ரேலங்கி
பந்துலு
மாஸ்டர் மோஹன்

நடிகைகள் :
பி. சாந்தகுமாரி
லலிதா
கிரிஜா
லெக்ஷ்மி பிரபா
பத்மினி

இன்னும் பலர்

காமினி திரையில்
## திவானு
நடிகர்கள்: சுரையா, சுரேஷ், சுமித்திராதேவி முதலியோர்
சங்கீதம்: நௌஷாத்
ஹிந்திச் சித்திரம்

## மைலன் தியேட்டர்
வெள்ளிக்கிழமை முதல்
## கிருஷ்ண பக்தி
ராஜகுமாரி, பி.யு. சின்னப்பா, கிருஷ்ணகுமாரி நடித்த தமிழ்ப்படம்



இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 செப்டம்பர் 14ந் தேதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org